SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Mr. Speaker, Sir, it is not to oppose the Bill that I am now standing. I only wish to draw the attention of the Hon. Minister and the Government to the fact that due to want of supply of electricity in time to the printing presses the publication of the daily papers are delayed. That is my experience. Electricity is supplied on the basis of horse-power to some papers and it has not been allowed to some others. There seems to be a sort of discrimination. This fact has already been brought to the notice of the department concerned. I hope the Hon. Minister will see that some sort of priority is given to the daily press so that the reading may not be affected."

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" Sir, I shall certainly take note of the suggestion of the hon. Member."

SRI M. PALANIYANDI :—" கனம் சபாநாயகர் அவர்களே, . . ." 12-27 p.m.

MR. SPEAKER :—" I must tell the hon. Member that it would be enough if he stands in his place to draw my attention. It is not necessary to show his hand."

SRI M. PALANIYANDI :—" சிமெண்ட் விலையை நிர்ணயிக்கும் போது மத்திய சர்க்கார் **Tariff Commission** என்ற ஒரு ஸ்தாபனத்தை நியமித்து தேசத்திலுள்ள எல்லா கம்பெனிகளிலிருந்தும் உற்பத்தியாகும் சிமெண்டினுடைய விலை விவரங்களை வரவழைத்து அதன்மேல் அவர்கள் சிமெண்டினுடைய விலையை நிர்ணயம் செய்கிறார்கள். ஆனாலும் நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய சிமெண்ட் தொழிற்சாலை இந்தியா பூராவிலும் இயங்கக்கூடிய ஒரு கம்பெனிக்கு உட்பட்டிருக்கிறது. இந்தியா சிமெண்டைத் தவிர, டால்மியா சிமெண்ட், ஏ.ஸி.ஸி. சிமெண்ட் இவைகளெல்லாம் அகில இந்தியாவிலுள்ள தொழிற்சாலைகளெல்லாம் சேர்ந்து ஒரு கணக்கைக் கொடுத்து அதன் பிறகுதான் **Tariff Commission** விலையை நிர்ணயிக்கிறார்கள்.

" சென்னை அரசாங்கம் இது விஷயத்தில் ஒன்றைக் கவனிக்கவேண்டும். சிமெண்டானது நாட்டிலுள்ள பெரும்பாலான மக்களுக்கு உபயோகப் படுகிறது. டாரிப் கமிஷன் இந்தியாவிலுள்ள எல்லாத் தொழிற்சாலைகளினுடைய கணக்குகளை எடுத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட விலையை அதற்கு நிர்ணயித்துவிடுவதால் சென்னை ராஜ்யத்திலுள்ளவர்களுக்கு சில சங்கடங்கள் உண்டாகின்றன. சென்னை ராஜ்யத்தில் சிமெண்டுக்கு வேண்டிய மூலப்பொருள்களெல்லாம் அதிகமாகக் கிடைக்கிறது. ஆகவே, சிமெண்டின் விலையை இங்கு குறைத்துக்கொடுக்க முடியும். டால்மியாபுரத்திற்

கருகே கல்லும், ஜிப்சமும், களிமண்ணும் கிடைக்கிறது. மதுக்கரைக்கு அருகிலும், திருநெல்வேலிக்கருகிலும் சிமெண்ட் தயாரிப்பதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைக்கின்றன. ஆனால், ஆந்திர ராஜ்யத்திலும் இன்னும் சில ராஜ்யங்களிலும் மூலப் பொருள்கள் வெகு தூரத்திலிருந்து கிடைக்கவேண்டியிருப்பதால் சிமெண்ட் தயாரிப்பதில் அவர்களுக்கு அதிகமான செலவு ஆகலாம். ஆனால், சென்னை ராஜ்யத்தில் மூலப்பொருள்கள் அருகிலேயே கிடைக்க வசதி இருந்துங்கூட சிமெண்ட் விலை அதிகமாகியிருக்கிறது. சிமெண்ட் விலையைக் கட்டுப்பாடு செய்வது சாதாரண ஏழை மக்களுக்கு அரசாங்கம் செய்யவேண்டிய முதல் கடமையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, டாரிப் கமிஷன் எப்படி விலையை நிர்ணயிக்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்கு ஒரு அதிகாரத்தை ராஜ்ய சர்க்கார் வாங்கி, சிமெண்டின் விலையைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மந்திரி அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்."

12-30 p.m. * SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவிலிருந்து சிமெண்டு நீக்கப்பட்டு விட்டது. மின்சார விநியோகம் மட்டும்தான் இந்த மசோதாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மின்சார சக்திக்கு விலை நிர்ணயிப்பதில் இருக்கக்கூடிய சில குறைபாடுகளை மந்திரி அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

" குடும்ப உபயோகத்திற்காக விளக்குகள், விசிறிகள் ஆகியவைகளுக்கு மின்சார சக்தி தேவையாக இருக்கிறது. சர்க்கார் டிபார்ட்மெண்டில் இருந்தாலும் சரி இன்னும் தனியாக கம்பெனியால் நடத்தக்கூடிய நிர்வாகத்திலும் சரி, ஒரு யூனிட்டுக்கு $4\frac{1}{4}$ அணாவுக்குமேல் வசூலிக்கப்படுகிறது. குறித்த காலத்தில் இந்தத் தொகையை கட்டவில்லை என்றால் ஒரு யூனிட்டுக்கு காலணா வீதம் மேலும் அபராதத் தொகையாக வசூலிக்கப்படுகிறது. இது மிகவும் அதிகமாக இருக்கிறது. நம் ஜனங்களுடைய வாங்கும் சக்தி எப்படி இருக்கிறதென்பதைப் பார்க்கவேண்டும். மின்சாரத்திற்கு அதிகமான விலை நிர்ணயித்திருப்பதால் நகரத்தில் இருக்கக்கூடிய பலவித மக்களும் இதை உபயோகப்படுத்துவதற்குத் தடையாக இருக்கிறதென்பதை மந்திரி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

" பெரும் தொழிற்சாலைகளை நடத்தக்கூடிய பெரிய முதலாளிகளுக்கும், லக்ஷக்கணக்கான ரூபாய்கள் லாபம் சம்பாதிப்பவர்களுக்கும் யூனிட்டு ஒன்றுக்கு $4\frac{1}{2}$ தம்பிடி என்று இருக்கும்போது குடும்பத் தேவைக்காக இதன் விலையைக் குறைக்க வேண்டாமா என்பதைத் தயவு செய்து மந்திரி அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" விவசாயத்திற்கு மின்சார சக்தி கொடுக்கப்படும்பொழுது அதற்கு விலை 1 அணாவிலிருந்து $1\frac{1}{4}$ அணா வரை இருக்கிறது. அதையும் குறைக்க வேண்டும். தொழிற்சாலைகளுக்கு யூனிட்டு ஒன்றுக்கு $4\frac{1}{2}$ தம்பிடி வசூலிக்கும்போது விவசாயத்திற்கு மட்டும் ஏன் ரூ. 0–1–3 வசூலிக்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் ஆலோசிக்கவேண்டும். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் தொழிற்சாலைகளில் உபயோகப்படும் மின்சார சக்திக்கு ஒரு யூனிட்டுக்கு மேலும் ஒரு தம்பிடி சேர்த்து வசூல் செய்தால் ஈடுகட்டிவிட முடியும். இதைச் சொல்வதினால் தொழிற்சாலைகளுக்கு இதை அதிகரிக்கவேண்டும் என்று நான் சிபாரிசு செய்வதாக அர்த்தம் இல்லை. தொழிற்சாலைகள் இதைத் தாங்கும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். விவசாயத்திற்கும், குடும்ப உபயோகத்திற்கும், மின்சாரத்தின் விலையைக் குறைக்கும்படியான ஏற்பாட்டைச் செய்ய சர்க்கார் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

* SRI V. GOPALA GOUNDER :—" Mr. Speaker, Sir, I want to take this opportunity to invite the attention of the Government to the supply of electricity in the South Arcot district. Of course, the

17th December 1954] [Sri V. Gopala Gounder]

Hon. Minister knows about it. But I want to draw particular attention of the Government to one important matter. With regard to the supply of electricity in the South Arcot district, the Government are charging one rate and the South Arcot Electric Distribution Company are charging another rate. For instance, the South Arcot Electric Distribution Company is charging five annas and nine pies for a unit whereas even the Government are charging only four annas and three pies.''

MR. SPEAKER :—'' How does that matter come in here? ''

* SRI V. GOPALA GOUNDER :—'' Sir, I wanted to take this opportunity to invite the attention of the Hon. Minister to it.''

MR. SPEAKER :—'' This is not the opportunity.''

* SRI V. GOPALA GOUNDER :—'' This Bill relates to the supply of electricity.''

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI :—'' Mr. Speaker, Sir, as regards the suggestion of the hon. Member Sri Palaniyandi that we should try to do something about cement, we have just now excluded the control on cement from the purview of this Bill. But if any representation is to be made in respect of this matter, let the hon. Member put it in writing and I shall forward the same to the Government of India or the proper authorities who will have to deal with the matter. With regard to the point raised by the hon. Deputy Leader of the Opposition, I entirely agree with him and I shall devote my full attention to it. As regards the point raised by the hon. Member Sri Gopala Gounder, as pointed out by the Chair, this is not the opportunity to discuss it and I have nothing more to add to it. With these observations, I request that the Bill be passed into law.''

MR. SPEAKER :—'' The question is—

' That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1954 be passed into law.' ''

The motion was carried and the Bill was passed into law.

(4) THE MADRAS INDEBTED AGRICULTURISTS (TEMPORARY RELIEF) AMENDMENT BILL, 1954.

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—'' Mr. Speaker, Sir, I beg to introduce the Madras Indebted Agriculturists (Temporary Relief) Amendment Bill [a], 1954, and move—

' *That the Bill be taken into consideration at once.*'

Sir, the only object of this Bill is to extend the life of the present Act to the end of the month of February 1955. As it is, the present

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 14th December 1954.

Act will be in force till the 5th February 1955. Even yesterday, when a non-official Bill on the same subject was debated upon, the discussion ranged on all aspects of the matter. Therefore, it will not be necessary to go into the details now as we are going to extend it only till the end of February. When a comprehensive Bill comes before this House, hon. Members will have ample opportunities to express their views on it. With these words, I commend this Bill to the acceptance of the House.''

Mr. SPEAKER :—'' Motion moved—

'That the Madras Indebted Agriculturists (Temporary Relief) Amendment Bill, 1954, be taken into consideration at once.'

In this connection, I must tell the House that for the whole of yesterday the House had full opportunity to discuss the non-official Bill on the same subject and it will be merely a repetition of what hon. Members said yesterday if we have a full discussion to-day also.''

*Sri M. KALYANASUNDRAM :—'' கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று இந்தப் பிரச்னை மீது விவாதம் நடந்திருக்கிறதென்பதை உணர்ந்துதான் நான் சில விஷயங்களைப் பேச விரும்புகிறேன். அனேகமாக அங்கத்தினர்கள் பேசக்கூடிய காலத்தில் ஏற்கெனவே சொன்ன கருத்துக்களை மீண்டும் குறிப்பிடவேண்டிய அவசியம் இருக்காது. மற்ற சில கருத்துக்கள் இருக்கக்கூடிய சில அங்கத்தினர்கள் பேச விரும்பலாம். அவர்களுக்கு மட்டும் ஒவ்வொருவருக்கும் ஐந்து நிமிஷம் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன். இன்று சபை ஒரு மணிக்குக் கலையவேண்டும். ஆகவே திரும்பவும் இடைவேளைக்குப் பிறகு சபை மூன்று மணிக்குக் கூடும்போது மேற்கொண்டு இந்த மசோதாவின் மீது விவாதத்தையும் வோட்டெடுப்பையும் வைத்துக்கொள்ளலாமென்று தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

Mr. SPEAKER :—'' பிற்பகல் மூன்று மணிக்கு சபை கூடிய பிறகு அரை மணி நேரம் விவாதத்தை வைத்துக்கொண்டு அதற்குமேல் வோட்டெடுப்பு தேவையானால் வைத்துக்கொள்ளலாம் என்று நீங்கள் சொல்கிறீர்கள்.''

* The Hon. Sri C. SUBRAMANIAM :—'' If it is the intention to have a division at 3 o'clock, it is better to have it at 1 o'clock because it takes some time for hon. Members to return after lunch-break. We can carry on the discussion till 1 o'clock when we can have the division.''

Mr. SPEAKER :—'' I do not want to stand in the way of religious people offering prayers at 1 o'clock. We can have it at five minutes past 1 o'clock.''

*Sri M. KALYANASUNDRAM :—'' ஒரு மணிக்குள்ளே முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. பொது விவாதத்தை அரை மணி நேரத்தில் முடித்துக்கொண்டாலும் இந்தப் பிரேரணையின் மேல் 'டிவிஷன்' கேட்கலாம். இந்த மசோதாவின் ஷரத்துவாரிப் பரிசீலனையின்போது ஒரு ஷரத்திலே மட்டும் நாங்கள் 'டிவிஷன்' கேட்கிறோம். ஆகவே, இடைவேளைக்குப் பிறகு விவாதத்தைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம் என்பது என்னுடைய யோசனையாகும்.''

17th December 1954]

MR. SPEAKER :—" Then shall we take it up at the third reading stage, when the motion ' that the Bill be passed into law ' is moved."

* SRI M. KALYANASUNDRAM :—" Sir, if we call for a division after the motion ' that the Bill be passed into law ' has been moved, it will mean that we are opposing the extension of the present Act, which is the object of this Bill. That is our difficulty."

MR. SPEAKER :—" Then, when does the hon. Member want a division? "

* SRI M. KALYANASUNDRAM :—" Let us continue the discussion till 1 o'clock when the House will adjourn for lunch. Resuming after lunch at 3 p.m. we shall take up clause by clause consideration of the Bill when we will have ample time to discuss. We will put one of the clauses to vote by division."

MR. SPEAKER :—" The hon. Member wants division for one clause only."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" After all the discussion on the Bill will not be much as we have had a full discussion on the same subject the whole of yesterday. Whatever a few hon. Members may have still to say they may do so now and the amendments may also be formally moved so as to complete the discussion by 1 o'clock. I am saying this subject to what the hon. Deputy Leader of the Opposition says in the matter."

* SRI S. SWAYAMPRAKASAM :—" It may be, from the point of view of the Government, that full discussion had already taken place. But from our point of view, hon. Members who have got fresh points to say, have not expressed their views. It is better to have the discussion till 1 o'clock and the Hon. Minister can reply at 3 p.m.

* SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, கடன் ஒத்திவைப்புச் சட்டம் நம்முடைய ராஜ்யம் பூராவிலுமே ஜனங்கள் கவனத்தின்முன் இருக்கக்கூடிய ஒரு முக்கியமான பிரச்னையாகும். இதைப்பற்றி இருவிதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. கடன் ஒத்திவைப்புச் சட்டம் நல்ல எண்ணத்தோடு கொண்டுவரப்பட்டிருந்தாலும் கடன் ஒத்திவைப்பு அவசியம் இல்லை ; கடன்காரர் பொறுப்பு அதிகரிக்க அதிகரிக்க நிச்சயமில்லாத தன்மை ஏற்படுகிறது என்று குறை கூறுகிறவர்களும் இருக்கலாம். அல்லது இதற்கு மாற்றாக விவசாயிகளுக்கு கடன் வசதி செய்து கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் இருக்கும்போது, இதை நீடித்து வைப்பதில் அர்த்தம் இல்லை என்ற நல்ல எண்ணத்தோடு குறை கூறுகிறவர்களும் இருக்கிறார்கள். கடன் கொடுத்திருக்கக்கூடிய லேவாதேவிக்காரர்கள் கடன் வசூல் செய்ய முடியவில்லை என்ற கெட்ட எண்ணத்தோடு இதை ஒத்திவைக்கவே கூடாது என்று எதிர்க்கிறவர்களும் இருக்கிறார்கள். எதிர்ப்பவர்களில் இரு தரப்பானவர்களும் இருக்கிறார்கள். எதிர்ப்புகளை ஆலோசனை செய்து சர்க்கார் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

[Sri M. Kalyanasundram] [17th December 1954

" மார்ச் மாதம் 1-ந் தேதி வரைக்கும் இந்தச் சட்டத்தை நீடிப்பதற்கு சர்க்கார் அதிகாரம் கோருகிருர்கள். உடனடியாக சர்க்கார் நல்லதொரு சட்டத்தைக் கொண்டுவந்து விவசாயிகளுடைய கடன் பளுவைக் குறைப் பதற்கு நடவடிக்கை எடுப்பார்களாஞல் அது நாம் ஆலோசிக்கவேண்டிய விஷயந்தான். அத்தகைய சட்டம் கொண்டுவரப்படுமாஞல் அதை நாங்கள் வரவேற்கிருேம். அத்தகைய சட்டம் கொண்டுவரவேண்டும் என்பதுதான் எதிர்க் கட்சியில் இருக்கும் எங்களுடைய நோக்கமும் ஆகும்.

" ஒரு மாத காலத்திற்கு மட்டும் நீடிப்பதற்கு இந்த அதிகாரத்தை அவர்கள் கேட்கக்கூடிய சமயத்தில் எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. இவ்வளவு முக்கியமான பிரச்னேயில் விரிவான சட்டம் கொண்டுவருவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கும் சமயத்தில், பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் சட்டசபை முன்பு கொண்டுவரும்போது, ஒரு செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டிய அவசியம் ஏற்பட்டு ஆலோசனே செய்யவேண்டுமாஞல் அப் பொழுது போதிய அவகாசம் இல்லே என்கிற நெருக்கடி ஏற்படும். நிர்ப்பந்தத்தில் அவசர முடிவுகள் எடுக்க நேரிடும் என்பதஞல் ஒரு வருஷ காலத்திற்கு இதை நீடித்துவிடவேண்டும்.

12-40 p.m. " காலவரையின்றி மூன்று நான்கு வருஷங்களுக்கு நீடிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லே. ஒரு வருஷத்திற்கு மட்டும் நீடித்துக் கொடுத்தால் பிப்ரவரி மாதம் விவசாய கடன் நிவாரணச் சட்டத்தை கொண்டுவந்து அதை நன்கு பரிசீலனே செய்து ஒரு முடிவிற்குவர சௌகர்யமாக இருக்கும். அப்படி பிப்ரவரி மாதம் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றி விட்டால் இந்தச் சட்டம் உடனே ரத்தாகி விடும். ஒரு வருஷத்திற்கு நீடிக்காவிட்டால் பிப்ரவரி மாதத்திற்குள் இன்னெரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்ற முடியாமல் போனுலும் போகலாம்; அவகாசம் போதவில்லே என்றும் சொல்லலாம். ஆகையால்தான் இன்னும் ஒரு வருஷம் இச்சட்டத்தை நீடித்து சாவகாசமாக மற்றெரு சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று சொல்லுகிறேன். மற்றெரு சட்டத் தைக்கொண்டு வந்து அதைத் தீவிரமாக ஆலோசனே செய்வதற்கு அவ காசம் ஏற்படும்.

" சர்க்கார் தீவிரமாக யோசனே செய்து விரிவான ஒரு சட்டம் கொண்டு வரப்போவதற்கும் அதன் பிறகு இந்தச் சட்டத்தை ரத்து செய்யப்போவ தற்கும் நான் பாராட்டுகிறேன். இன்று நாட்டிலிருக்கக் கூடிய விவசாயி களுடைய கடன் சுமை எப்படியாவது குறைய வேண்டும். அதற்காக பெரிய கிளர்ச்சிகளும் மகாநாடுகளும் கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றி வருகின்றுர்கள். விவசாயிகளில் பெரும்பான்மையானவர்கள் ஒரு பக்கத்தில் இந்தக் கடன் ஒத்தி வைப்பதை வரவேற்பார்கள். இந்தச் சட்டத்தை ரத்து செய்து விட்டால் பெரிய நிலச்சுவாந்தார்களும் லேவா தேவிக்காரர்களும், கொடுத்த கடனே வசூல் செய்வதற்கு வேண்டிய நிர்பந்த முறைகளேக் கையாளுவார்கள். அந்த மாதிரியான நிலேமையை ஏற் படுத்தி விடக்கூடாது என்கிற யோசனேயை நான் சர்க்காருக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் சர்க்கார் அபாயகரமான ஒரு தர்ம சங்கடமான நிலேயிலிருக்கிருர்கள். இந்தச் சட்டத்தை ரத்து செய்து விடுகிருேம் என்ருலும் அல்லது வாய்தாக் கொடுக்கிருேம் என்று சொன்னுலும் பின்னுடி ஏதோ ஒரு பயங்கரமான சட்டம் வரப்போகிறதோ என்ற பயம் விவசாயிகளிடத்தில் இருக்கிறது. ரத்து செய்து விட்டால் லேவாதேவிக்காரர்களும் பெரிய நிலப்பிரபுக்களும் கடனே வசூல் செய்வதற்கு தீவிர நடவடிக்கை எடுப்பார்களே என்று விவசாயிகள் பயங்கொண்டிருக்கின்ருர்கள். இதைச் சர்க்காருடைய கவ னத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

"சர்க்கார் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது ஏழை விவசாயி களும் குத்தகைக்காரர்களும் தாங்கள் வாங்கிய கடனே திருப்பிக் கொடுக்க வேண்டாம் என்று சட்டம் செய்ய வேண்டும் என்று யாரும் சொல்ல வில்லே. ரூ. 150 அல்லது ரூ. 200 க்கு உட்பட்ட வரையில் வாய்தா செலுத்தும் நிலச்சுவாந்தார்கள் உள்பட ஏழை விவசாயிகள் இப்பொழுது

17th December 1954] [Sri M. Kalyanasundram]

இருக்கக்கூடிய கடனை கோர்ட்டு மூலமாகக் கட்டாயப்படுத்தி வசூலிப்பதற்கு பிறபட்டு வரும் சட்டம் இடம் கொடுக்கக் கூடாது. அந்த அடிப்படையை ஏற்றுக்கொள்ளாவிட்டால் விவசாயிகள் நன்மை அடைய முடியாது. அவர்களுக்கு நாம் நன்மை செய்யவும் முடியாது. ஒரு பகுதி தொகையை செலுத்தி விட்டால் மிச்சத் தொகைக்கு நாம் ஒத்தி வைப்பு கொடுக்கிறோம் என்று கொண்டு வந்தால் அதனாலும் கொஞ்சம் நன்மை ஏற்படலாம். அனுமதித்துள்ள தொகையை வசூலிப்பதற்கு கோர்ட்டு மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் விவசாயிகள் கட்டாயம் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். குறிப்பாக ஏழை விவசாயிகளுடைய கடனை வசூலிப்பதற்கு கோர்ட்டு மூலம் நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரத்தை சட்டத்தில் புகுத்தக் கூடாது. அதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

" மேலும் கடன் தொகையானது உண்மையாகக் கொடுக்கப்பட்டனவா என்பதையும் அது நேர்மையாக வாங்கப்பட்டதா என்பதையும் சர்க்கார் கவனிக்க வேண்டும். சாதாரணமாக இப்பொழுது நூற்றுக்கு தொண்ணூறு பேர்களுடைய கடன் எப்படி ஏற்பட்டிருக்கிறது என்றால் அவர்கள் வாங்கிய பணத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக எழுதி வாங்கப்பட்டிருக்கிறது. தற்போது 5½ சத விகிதத்திற்கு மேல் வட்டி கொடுக்கக்கூடாது என்று இருப்பதால் கோர்ட்டுக்குப் போனாலும் அதற்கு அதிகமாக வட்டி கொடுக்க மாட்டார்கள் என்பதற்காக முன் கூட்டியே விவசாயிகளிடமும் குத்தகைக்காரர்களிடமும் அதிகப்படியாக எழுதி வாங்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கடனை பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். அப்படிப் பரிசீலனை செய்து பார்ப்பதற்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் விவசாய தாலூகாக்களிலும் இதற்கு வேண்டிய ஒரு சமரச போர்டையோ அல்லது விவசாயக் கோர்ட்டையோ ஏற்படுத்தி இதை பரிசீலனை செய்யவேண்டும். 1939-ம் வருஷத்திற்குப் பிறகு ஏற்பட்ட கடன் தொகைக்கு குறைந்தது என்ன வட்டி கொடுக்க வேண்டும் என்றும் எது நியாயமான வட்டி என்றும் பரிசீலனை செய்து அதற்குத் தகுந்தாற் போல் தீர்ப்புக் கொடுக்க அதில் இடம் இருக்க வேண்டும். அந்த மாதிரியான அதிகாரத்தை அந்த சட்டத்தில் புகுத்த வேண்டுமென்ற யோசனையையும் சொல்ல விரும்புகிறேன். உபரியான தொகைக்கு தீர்ப்புக் கொடுக்க இடம் கொடுக்கக்கூடாது. விவசாயிகளிடமிருந்து கடனை வசூல் செய்ய வேண்டுமென்றால் அந்த விவசாயி தன்னுடைய வாழ்க்கைக்கு வேண்டிய செலவு போக அதாவது அவனுடைய வருமானத்திலிருந்து தன்னுடைய வாழ்க்கைக்கு வேண்டிய செலவு போக மிச்சமிருக்கும் பணத்தைத்தான் அவர்கள் வசூலிக்க வேண்டும் என்கிற அடிப்படையில் அந்தச் சட்டத்தை இயற்ற வேண்டும். விளைந்த பொருள்களை ஜப்தி செய்து கொண்டு போய் விட்டால் விவசாயி தொடர்ந்து தன்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு முடியாது. அடுத்த வருஷம் தன்னுடைய விவசாயத்தை நடத்துவதற்கு அவனுக்கு இடையூறு ஏற்பட்டுவிடும். அதன்படி சட்டத்தில் இடம் கொடுக்கவேண்டும். ஆகவே இவைகளையெல்லாம் பரிசீலிப்பதற்கு அந்தச் சட்டம் கொண்டுவருவதற்கு முன் ஒரு கமிட்டியை நியமித்து இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். அதனால் ஒரு கமிட்டியை அமைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அந்தக் கமிட்டியும் இந்தச் சபையின் கமிட்டியாக இருக்க வேண்டும். கட்சி விருப்பு வெறுப்பு இல்லாத சகல கட்சிப் பிரதிநிதிகளும் கொண்ட ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அவர்களுக்கு சுற்றுப் பிரயாணம் செய்ய அதிகாரம் கொடுக்கவேண்டும். அதன்மேல் அந்தக் கமிட்டி ஜில்லா ஜில்லாவாக சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்காங்கு இருக்கக் கூடிய நிலைமையை பரிசீலனை செய்து, தங்களுடைய யோசனைகளுடன் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும். அந்த அறிக்கையின் மீது சர்க்கார் ஒரு நியாயமான சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். அதன் மேல் சர்க்கார் இயற்றும் சட்டங்களில் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படும். சட்டத்தை நீடித்துக்கொண்டே போனால் அடுத்த வருஷம் என்ன வருமோ என்ற சந்தேகத்திலேயே விவசாயிகள் இருந்து வருவார்கள். அதனால் விவசாயிகளிடத்தில் பலத்த சந்தேகம் ஏற்படுவது சகஜம். இவ்விதம் விவசாயிகள் சந்தேகப்படும் நிலைமையில் இருந்தால் அது எங்கள் பேரில்

குற்றம் இல்லை. சர்க்காருடைய நடவடிக்கைதான் அதற்குக் காரணம் என்பதை நான் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த சபையின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு கமிட்டியை நியமித்து மாகாணம் பூராவும் அது சென்று பரிசீலனை செய்து விவசாயிகளுடைய நிலைமையை அறிந்து அதன் பிறகு ஒரு அறிக்கையை சர்க்காருக்கு கொடுக்கவேண்டும். அந்த யோசனையை சர்க்கார் ஏற்றுக்கொண்டு அதன்படி ஒரு சட்டம் இயற்றினால் அதை எல்லோரும் வரவேற்பார்கள். ஆகவே இவைகளை யெல்லாம் கவனித்து இன்னும் ஒரு வருஷத்திற்கு இந்த மசோதாவை ஒத்தி வைத்துவிட்டு அதற்குள் வேறொரு மசோதாவைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் மற்ற விஷயங்களைப் பற்றி இந்த மசோதாவை ஷரத்து வாரியாகப் பரிசிலிக்கும்போது தெரிவித்துக்கொள்ளுகிறேன் என்பதோடு நான் முடித்துக்கொள்ளுகிறேன்."

12-50 p.m. Sri E. L. RAGHAVA MUDALIAR :—" Mr. Speaker, Sir, the Government are fully aware that this Moratorium Act was enacted last February to be in force for a period of one year only and, therefore, they ought to have brought forward a comprehensive Bill before the expiry of this Act. The action of the Government in having brought forward this Bill to extend the period of operation of the Act for a short period, i.e., till the end of February 1955 justifies the remark made by the Deputy Leader of the Opposition that their (Government's) action shows bankruptcy of ideas and plans. The fact that the Government want to extend the period of operation of the Act for a period of about one month only shows that they intend to bring forward a comprehensive Bill next February and rush it through in indecent haste as they are now doing with the Dramatic Performances Bill, 1954. The Bill which the Government are going to bring in must necessarily be a comprehensive measure, must be in force for a few years and must afford real benefit to real agriculturists. Such a Bill may have to be referred to a Select Committee. Unless the Government want to rush the Bill through, it will not be possible for them to pass it before the end of February. The Government should try to publish the Bill before the end of December. They should not ask for the extension of the Act only for a short period, till the end of February, but they should ask for a little longer period, till the end of May."

* Sri T. ANANTA PAI :—"Mr Speaker, Sir, I rise to support the motion of the Government that the Madras Indebted Agriculturists (Temporary Relief) Amendment Bill, 1954 which seeks to extend the period of operation of the original Act for a short period i.e., till the end of February 1955, be taken into consideration at once.

" Sir, you will recollect that when the Indebted Agriculturists (Temorary Relief) Bill was introduced in this House last time, the Members were assured that the measure would be in extistence for a period of one year only. Taking into consideration the near-famine conditions and drought in certain parts of the State and the fact of many of the creditors' rushing to the Courts against agriculturists and making them unnecessarily spend money over court-costs,

17th December 1954] [Sri T. Ananta Pai]

it was thought that some sort of relief should be granted to agriculturists. It is a matter of commonsense that if we provide for the postponement of the recovery of debts from agriculturists for a period of one year, naturally at the expiry of that period, those people who are not able to pay will be anxious that they should be given further time for repayment and those people who are creditors will be anxious that no further extension should be given. Thus, there will be two points of view and these are being pressed forward on the floor of the House. Naturally, at the expiry of this period of one year, creditors will rush to the courts to file suits against debtors and from the point of view of statistics, a number of suits will be registered. It can be shown from these facts that the creditors are in undue haste or have been absolutely wrong in trying to recover their dues. At the same time, the apprehension felt by the debtors is genuine. I am glad that the Government have appreciated the point of view that this Act is intended to benefit the actual tillers of the soil and should not be taken as a cloak by others to break all their contractual obligations. I am glad that the Government want sufficient time till the end of February to consider all points of view. I am sure that between now and the date of the expiry of the measure the Government have got sufficient time to take into consideration all the various representations that have been made not only on the floor of this House but also through the Press, and I am also sure that the provisions that are going to be incorporated in the new measure will be such as will help those people whom they intend to help.

Sir, when the Indebted Agriculturists (Temporary Relief) Act was considered last time, the Government exempted themselves as well as the co-operative societies from the provisions of that Act and chose to interfere with the normal credit machinery. It is presumed that it is easy for an agriculturist to get loans. Speaking from a banker's point of view, I can say that banks advance money only on security. Those agriculturists who do not own lands will have to pledge their jewellery if they want to raise loans. The Indebted Agriculturists (Temporary Relief) Act does not help them in any way to get loans. If those people are not able to pay their dues to the banks, there is no question of any bank going to a court of law because they can recover their dues by auctioning the jewels. It is not this type of credit machinery that is tampered with. The Government ought to come forward with an alternative machinery for providing credit in such cases. The Government say that debts due to Government and the co-operative societies must be paid whatever the circumstances be. If the agriculturists are in difficulties, there is no point in asking them to pay their dues to the Government or to the co-operative societies, because the Government machinery is at present quite inadequate to meet the credit demands of the State. I know where credit is provided the Government insist on certain conditions which it is difficult for any agriculturist to fulfil. If a man wants to borrow, he has to give security and he has to obtain the signature of his landlord. Hon. Members can generally

imagine whether any landlord will be willing to put his signature for his tenant's application. The Government will have to consider seriously whether by adopting such measures as this they are not tampering with the credit machinery. If the normal credit machinery is tampered with, the Government should provide an alternative machinery, so that agriculturists may not suffer. There are people who believe that agriculturists have not suffered as a result of this measure. It is true that some of them have been benefited. Suppose we extend the period of operation of this Act for a further period. Then, the normal inclination of the agriculturist is to take advantage of the legislation and postpone the repayment of debts. Instead, it may as well be legislated that all debts be wiped out altogether. If tht operation of this Act were to be extended for a period of one more year, the agriculturists will have to pay in addition to the principal, interest for the last year and for this year. Thus, if we go on extending the period of operation of this Act year by year, we will have to go on adding the interest due for each year. The debtor must be impressed that it is not with the idea of wiping out all debts that this legislation has been brought forward but to make it convenient for him to repay his debts. The Government must, first of all, decide what are the types of people who must be benefited under this Act. As it is, people who even possess a patch of garden land want to take shelter under this Act. But this type of people should not be allowed to benefit. Secondly, an alternative machinery should be devised whereby debts can be repaid in a convenient number of instalments so that the normal facilities existing at present may not be tampered with. From the unnatural stand we took last year, we must try to get into a position whereby the debtor-creditor position is re-established.''

12-57 p.m. * SRI K. VINAYAKAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, விவசாயிகள் கடன் நிவாரண மசோதா சென்ற ஆண்டு கொண்டுவரப்பட்டபோது விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காகத்தான் அது கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்பட்டது. நன்மை செய்யவேண்டுமென்ற ஒரு நோக்கத்தைக் கொண்டுதான் அப்பொழுது மசோதா கொண்டுவரப்பட்டது. அப்பொழுது பேசிய தோழர்களெல்லாம், ' பொங்கலுக்காக விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிற வெகுமதி ' என்றெல்லாம் புகழ்ந்து பேசினார்கள். ஆனால், அன்று இருந்த நிலைமை இன்று மாறிவிட்டதா என்பதை அரசாங்கத்தாரும் இந்த மசோதா நீடிக்கக்கூடாது என்று சொல்கிற தோழர்களும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

"அப்பொழுது எந்நிலைமையில் இது கொண்டுவரப்பட்டது ? நாட்டில் மழை இல்லாமையால், அதனால் ஏற்பட்டிருந்த பஞ்சத்தினால் விவசாயிகளுக்குக் கடன் பளு அதிகமாகப் போன காரணத்தினால் விவசாயிகளைக் கடன் கொடுத்தவர்கள் வற்புறுத்திக் கடன் வசூல் செய்யக் கூடாது என்ற நோக்கத்தைக் கொண்டுதான் அன்றிருந்த அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டுவந்தது. மசோதாவின் நோக்கமே நல்ல நோக்கம் என்று தான் எதிர்க்கட்சியாரும் அதைப் பாராட்டிப் பேசினார்கள். அப்பொழுது இருந்த நிலைமை இன்று மாறியிருக்கிறதா ? இந்த ஒரு ஆண்டு காலத்திற்குள் விவசாயிகள் இன்று நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறார்களா ? இவைகளையெல்லாம் அரசாங்கத்தார் சிந்திக்க வேண்டும். இந்த மசோதா இனியும் நீடிக்கக்கூடாது. விவசாயிகளுக்கு நிவாரணம் இனிமேலும் தேவை இல்லை என்று சொல்லக்கூடிய தோழர்களும் தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

17th December 1954] [Sri K. Vinayakam]

" இந்த மசோதாவின் காரணமாக விவசாயத்திற்குக் கடன் கொடுத்து வந்தவர்கள் இனி கொடுக்க மறுக்கிறார்கள் என்றும், இப்படிப்பட்ட ஒரு சங்கடமான நிலைமையில் விவசாயிகள் கடன் வாங்கி விவசாயத்தில் செவ்வனே ஈடுபடமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள் என்றும் ஒரு சிலர் சொல்லுகிறார்கள். அப்படி அவர்கள் எடுத்துச் சொல்வதற்கும் அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு வக்காலத்து வாங்கி அவர்களுடைய கட்சியை எடுத்துச்சொல்வதற்கு வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். குழுக்களின் மூலமாக அவர்கள் தங்களுடைய கட்சியை எடுத்துச் சொல்லுவதற்கும், அதற்கு விளம்பரம் கிடைப்பதற்கும் வாய்ப்புகள் அவர்களுக்கு இருக்கின்றன. ஆனால், உண்மையிலேயே மசோதாவினால் பயனடைகிற விவசாயிகள் தங்களுடைய கருத்துக்களை நாட்டு மக்களுக்கோ அரசாங்கத்திற்கோ எடுத்துச் சொல்வதற்கு தகுந்த வாய்ப்புகள் இல்லை. ஆகையால், சாதாரண விவசாயி, அதாவது எவன் இந்த மசோதாவினால் பயன் அடைகிறானோ அவன் தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாததால் ஒரு சாராருடைய கருத்துத்தான் மக்களுக்குத் தெரிகிறது. இந்த மசோதா நீடிக்கவேண்டுமென்று எடுத்துச் சொல்லுவதற்கு வசதியில்லாமல் விவசாயி இருக்கிறான். விவசாயினுடைய குரல் நாட்டிலுள்ளவர்களுக்குக் கேட்காத காரணத்தினால்தான் இந்த மசோதா இனிமேல் நீடிக்கக்கூடாது என்று சொல்லக்கூடிய ஒரு கருத்து இருக்கிறது. நான் எடுத்துச் சொல்ல விரும்புவது இதுதான். மழை ஓரளவு பெய்தது என்பது வாஸ்தவந்தான். ஆனால், மழை பெய்ததனால் விவசாயிகளுக்கு அதிகமான வருவாய் கிடைத்துவிடவில்லை. அவர்களுடைய நிலைமை உயர்ந்துவிடவில்லை. அவர்கள் பட்ட கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கான வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டுவிடவில்லை."

MR. SPEAKER :—" The hon. Member may continue his speech after lunch.

"The House will now adjourn for lunch and meet again at 3 p.m."

The House then rose for lunch.

(After lunch—3 p.m.)

* SRI K. VINAYAKAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, முற்பகலில் நான் பேசிக் கொண்டிருந்தபோது இந்த மசோதா சென்ற ஆண்டிலே கொண்டுவரப்பட்டதற்கான காரணம் விவசாயிகள் தங்களுடைய கடனைக் கொடுக்கமுடியாததுதான் என்று குறிப்பிட்டேன். ஆனால், இப்பொழுது அவர்களுடைய நிலைமையில் மாறுதல் உண்டாயிருக்கிறதா என்றால் அதிகமான மாறுதல் ஒன்றும் இல்லை. விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்குத் தகுந்த வரும்படி வந்திருந்தால் அவர்கள் கடனைக் கொடுத்துவிடமுடியும். ஏதோ ஒரு அளவுக்கு மழை பெய்திருந்தபோதிலும் அதனால் அவர்களுக்கு வருவாய் அதிகரிக்கவில்லை.

" இந்த மசோதாவினால் ஒரு தொந்தரவும் இருக்கிறது. 'விவசாயி' என்ற பெயரில் வசதி உள்ளவர்களும் நிவாரணத்தை அனுபவிக்கிறார்கள். The definition of the word 'agriculturist' in the Act is defective. சென்னையில் அதிகமான பணத்தை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்பவர்களும், வருமான வரி, விற்பனை வரி, வீட்டு வரி ஆகியவைகளையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிற பெரிய வியாபாரிகளும் ஏதோ தாங்கள் அரை எக்கர், ஒரு எக்கர் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால் இந்த மசோதாவின் கீழ் நிவாரணம் பெறுகிறார்கள். நேரிடையாக விவசாயம் செய்யாதவர்களும் 'விவசாயி" என்ற பெயரில் இந்த மசோதாவினால் பலன் அடைந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட சிக்கலும் இருந்து வருகிறது. இந்த மசோதா சென்ற ஆண்டு இந்தச் சபையில் விவாதத்திற்கு வந்தபோது எங்கள் சார்பில்

இருக்கும் அங்கத்தினர்கள் இந்த விஷயத்தைப்பற்றி அரசாங்கத்திற்கு எடுத்துச் சொன்னார்கள். அன்றிருந்த அரசாங்கம் அதைக் கவனித்தாரில்லை. குறிப்பிட்டவர்களுக்கு நிவாரணம் தரவேண்டுமென்ற எண்ணத்தைப் பின்னால் வைத்துக்கொண்டு இந்த மசோதாவைக் கொண்டுவந்தார்களேயொழிய ஏழை மக்களுக்குப் பயன் படுகிறது என்று சொல்ல முடியாது. வக்கீல் தொழிலில் இருப்பவர்கள் தங்களுக்குத் தகுந்த அளவு கோர்ட்டில் வேலை இல்லை என்று ஓரளவு எடுத்துரைக்கிறார்கள். எடுத்துரைப்பதற்கு ஓரளவு அர்த்தம் இருந்தாலுங்கூட அவர்களுக்காகவா இந்த மசோதா, அல்லது விவசாயிகளுக்காகவா இந்த மசோதா என்பதை அரசாங்கம் சிந்திக்கவேண்டுமே தவிர, கோர்டில் வியாஜ்யம் நின்றிருக்கிறது என்ற நொண்டிச் சாக்கை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

"பொதுவாக விவசாயிகளுக்கு இப்பொழுது கடன் கொடுக்க யாரும் முன் வருவது கிடையாது என்று சொல்வதில் அர்த்தம் இருக்கிறது. The credit system in the villages is defective. காரணம் அங்கிருக்கும் முதலாளிகள், பணத்தை வைத்துக்கொண்டு வட்டி வியாபாரம் செய்பவர்கள். விவசாயிகளை நம்பி கடன் கொடுக்க இப்பொழுது மறுக்கிறார்கள். ஏனென்றால், விவசாயிகளுக்குப் பணத்தைக் கொடுத்து உதவி செய்தால் கொடுத்த கடன் என்ன ஆகும், அரசாங்கம் தலையிட்டு என்ன செய்துவிடுமோ, பணம் வருமா வராதா என்றெல்லாம் நினைத்து விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க முன் வருவதில்லை. நாணயமாகத் திருப்பிக் கொடுத்துவிடும் விவசாயிகளுக்குக்கூட கடன் கிடைப்பதில்லை. ஆகவே, விவசாயிகளுக்குத் தேவையான கடன் வசதிகளைக் கிராமங்களிலேயே கிடைக்கும்படியான ஏற்பாட்டை அரசாங்கம் செய்துவிட்டால் சட்டத்தில் இருக்கக்கூடிய தொல்லைகள் தீர்ந்துவிடும். இதற்கு நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சிறிய கமிட்டியை வைத்து அவர்கள் அரசாங்கத்திற்கு யோசனை சொல்லும்படி நியமிப்பது அவ்வளவு நல்லது என்று நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் கூறுவது என்னவென்றால், பொதுவாக இந்தச் சபை அங்கத்தினர்களில் சிலரைக்கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து அவர்களுடைய யோசனையை எடுத்துக்கொண்டால் அப்பொழுது அரசாங்கம் நல்ல முறையில் காரியங்களைச் செய்வதாக ஒரு நல்ல எண்ணம் மக்களுக்குத் தோன்ற முடியும். அப்பொழுதுதான் மக்களுக்கு நல்லது செய்வதற்கான எண்ணம் சர்க்காருக்கு இருக்கிறதென்று சொல்ல முடியும்.

"எந்த அளவுக்கு கடன் அவர்கள் கடன்காரர்களுக்குத் தரவேண்டுமோ அதை ஐந்து பாகமாகப் பிரிக்கவேண்டும். முதலையும் ஐந்து பாகமாகப் பிரித்து, வட்டியையும், ஐந்து பாகமாகப் பிரித்து ஐந்து ஆண்டுகளில் கடனைத் திருப்பித் தந்துவிட்டால் கடனை ஒழித்துவிடலாம். கடனை வாங்கியிருந்து திருப்பிக் கொடுக்க முடியாத அளவு பாதிக்கப்படுகிற விவசாயிகளுக்கு சலுகை காட்டவேண்டும். இப்படிப்பட்ட திருத்தமொன்று வரவேண்டுமேயொழிய 1955-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 7-ம் தேதியோடு இந்த மசோதா காலாவதியாகிவிடுகிறது, அதற்குள் செய்யவேண்டிய திருத்தங்களைச் செய்து விரிவானதொரு மசோதாவை எங்களால் கொண்டுவர முடியவில்லை. ஆகையால் பிப்ரவரி மாதம் முடிய இந்த மசோதா நீடித்து வரவேண்டுமென்று அரசாங்கம் கோருவது நியாயமா என்று சிந்திக்க வேண்டும்.

"இன்னொரு மசோதா சர்க்காருடைய மும்முரமான கவனத்தில் இப்பொழுது இருந்துவருகிறது. நாடகங்களைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான மசோதாவிற்கு அரசாங்கம் காட்டுகிற அக்கரையை ஏழை மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய இந்த மசோதாவில் காட்டியிருந்தால் நல்லதொரு மசோதாவை, அவசியமான திருத்தங்களோடு கொண்டுவந்திருக்க முடியும். இன்றைக்கு அரசாங்கம் உண்மையான பிரச்னையை மறைத்து காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் வேலையில்லாமல் வாடுகிறார்கள். மக்களுக்கு வேண்டிய அளவு கடன் கிடைப்

17th December 1954] [Sri K. Vinayakam]

பதற்கு வாய்ப்பு இல்லை. விவசாயம் குன்றி விவசாயிகள் இன்றைக்குத் தொலலைக்கு உட்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைப்பற்றி சிந்திக்காமல், **More after the shadow than after the substance** என்ற முறையில் இவர்கள் எதோ பயனற்ற ஒரு மசோதாவிலே அதிகமாக ஈடுபடுகிறார்களேயொழிய ஏழை விவசாய மக்களுக்கு உடனடியாகச் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி கவனித்து அதற்கான மசோதா சம்பந்தமாக அரசாங்கம் கவனிப்பதில்லை. பணம் படைத்திருக்கும் முதலாளிகளிடமிருந்து கடன் பட்ட ஏழை விவசாயிகளுக்கு ஒரு பாதுகாப்பு ஏற்படுத்துவதற்கு ஏற்ற முறையில் சூழ்நிலையை உண்டாக்குவதைவிட்டு சிறு சிறு மசோதாவிலே அரசாங்கம் கவனம் செலுத்துகிறார்கள். ஆகையால், அரசாங்கத்திற்கு எதிர்க் கட்சி சொல்ல வேண்டிய கடமை என்னவென்றால், இந்த மசோதாவை பிப்ரவரி மாதக் கடைசி வரையில் நீடிப்பதைவிட இன்னும் ஒரு ஆண்டு நீடிக்க வேண்டும். இந்த அவகாசத்திற்குள் தேவையான எல்லா அம்சங்களும் பொருந்திய விரிவானதொரு மசோதா (Comprehensive Bill) தயாரித்து இந்த ஒரு ஆண்டு முடிவதற்குள் சட்டசபை முன் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். விவசாயிக்கு உண்மையிலேயே சாதகமான முறையில் அந்த மசோதா தயாரிக்கப்படவேண்டும். 'போலி' விவசாயிகளைப்பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். (capitalists who are absentee landoids, விவசாயத்திலேயே ஈடுபடாமல் ஒன்று அல்லதுஅரை ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு வியாபாரத்திலேயே ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பெரிய பெரிய முதலாளிகள் 'விவசாயி' என்ற பெயரை வைத்துக்கொண்டு சாதாரண ஏழை விவசாயிகளுக்கென ஏற்பட்டிருக்கும் இந்த மசோதாவினால் சலுகையை அடைந்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நிவாரணம் அவசியமில்லை. அவர்களையெல்லாம் **agriculturist** என்ற **definition** லிருந்து நீக்கிவிட வேண்டும். உண்மையாகவே விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் விவசாயத்தையே நம்பியிருப்பவர்களுக்கும்தான் இந்தச் சலுகை இருக்க வேண்டும். ஐந்து ஏக்கருக்குக் கீழே நிலம் வைத்திருப்பவர்களுக்கு மட்டும் இந்த நிவாரணம் கொடுப்பது போதுமானது. ஆகவே, இந்த முறையில் திருத்தங்களைச் செய்து, நல்லதொரு மசோதாவை நான் குறிப்பிட்ட ஒரு ஆண்டுக்குள்ளாக அரசாங்கம் கொண்டுவர முயற்சிக்குமானால் எதிர்க்கட்சியிலிருந்து அவர்களுக்குப் பெருத்த ஆதரவு கிடைக்குமென்று சொல்லிக்கொண்டு இந்த மசோதா நீடித்து இருக்கவேண்டுமென்று வற்புறுத்தி என்னுடைய வார்த்தையை இத்துடன் நிறுத்திக் கொள்கின்றேன்."

* SRI S. PANCHAKSHARAM :—" Mr. Speaker, Sir, I support this measure. Yesterday, a private member's bill was debated *in extenso* and the Hon. Minister in his reply stated clearly that the Government was contemplating to bring in a separate piece of legislation after studying the working of the Act and rectifying all the defects that might be found in the working of the Act, and he put it very effectively and cogently." 3·10 p.m.

(The hon. Member was attempting to read an item of news from a daily paper.)

SRI K. VINAYAKAM :—" On a point of order, Sir. Is it proper to read a newspaper report in the House?"

* SRI S. PANCHAKSHARAM :—" I am quoting only one or two sentences, Sir."

MR. SPEAKER :—" The hon. Member need not read it at length."

[17th December 1954

* SRI S. PANCHAKSHARAM :—" I am quoting only one or two sentences. I cannot read a newspaper while speaking, but I can quote newspaper extracts, and I think I am in order."

SRI K. VINAYAKAM :—" The hon. Member is questioning your ruling, Sir."

MR. SPEAKER :—" No, he is not questioning it. He is just explaining."

* SRI S. PANCHAKSHARAM :—" The Hon. Minister said : ' I may tell the House that the existing Act was passed as a sort of special remedy for a special disease under very special and particular circumstances. Such a remedy was of a temporary nature. The working of the Act for almost a year had resulted in very many consequences, divergent and controversial. I agree that the agriculturist gets very little however much he produces. The Government have now published a Bill for extending the existing Act till the end of February.' The reason that the Hon. Minister advanced yesterday is clearly the one reason for our supporting this measure. As he stated yesterday, there are several defects in the working of the Act. The agriculturists who were sought to be benefited under that Act have not really been benefited. That was because of the defects in the Act. It has been pointed out in the memorandum submitted by the Bar Councils Federation—it was a considered memorandum and it has been published in the papers—and I learn one such memorandum has been sent to the Government also for consideration. It is a considered and detailed memorandum that has been published and the several defects that have been pointed out are worthy of note by the Government.

" One thing that has happened as a result of the Act is that the *bona fide* agriculturist has not been benefited at all. From my own knowledge of the working of the Act, I can with a certain amount of confidence say that the genuine agriculturist has not been benefited. Rural credit economy is a thing which is on a different footing from what it is in the urban areas. I can authoritatively say that in villages, it is one agriculturist that lends to another agriculturist, an agriculturist who is frugal and who is able to put by something—it is he who is lending and is able to lend on easy terms to his fellow-agriculturist. He does so, so that he may also prosper while helping his fellow-agriculturist. It is not the money-lender, it is not the pawn-broker or any other banker that advances these moneys; it is another agriculturist that gives these facilities to the agriculturist. That is the rural credit system. When the Act was working, it has put a stop to this credit that was in vogue in villages. The agriculturist who was saving something was advancing moneys and giving credit facilities to his fellow-agriculturist and now he has stopped it because he is not in a position to realise what he had advanced according to his own terms and according to the tenor of the document which he had taken from

17th December 1954] [Sri S. Panchaksharam]

the debtor. That is the whole defect of the Act and it is the first and most important defect and this aspect has to be considered by the Government in very great detail and this has to be rectified.

"Further, the Government has not provided any alternative machinery for helping these ryots when they (agriculturists) were not in a position to get advances from fellow-agriculturists or any other person. Government should have provided alternative credit facilities and for advancing small sums on easy terms to these people. They have not done that and as a result, the people in the villages have not been able even to raise Rs. 10 or 15 for purchasing manure. I can quote one example. I am the president of a co-operative store which is dealing in manures. Two years back, there was such a great demand for ammonium sulphate that as soon as the Store got a consignment, it was disposed of within a few hours. Last year, there was not such a great demand, because the purchasing power of the agriculturists had gone down. Still, somehow or other he managed to muster the necessary money and come to the Store and purchase at least a small quantity of ammonium sulphate. So two years ago, if it took six hours to sell a quantity of 50 bags, last year it took two days; and this year, it took 50 days to dispose of 50 bags of ammonium sulphate. It is all because they were not in a position to raise any amount on credit from anybody. Even the small trinkets and jewels they had were either pledged or sold away. The Act has not given them any relief. Whatever credit remained with an agriculturist was his own personal security, and that was stopped by this Act. Therefore, this year, he was not able to purchase any manure at all for his agricultural operations. That is the position today to which the agriculturists have been reduced.

"Sir, this Act was a thing which was contemplated by Rajaji when he was in office last year. It was an obsession with him that the agriculturists should be helped and he thought the agriculturists really deserved some relief. Therefore, in 1937, he sought to bring relief to them by promulgating a moratorium and save them from harassment by their creditors. The opposition to that was so great and so powerful that he had to drop it. But he conceived another idea of giving relief to them and that resulted in the Agriculturists' Debt Relief Act of 1938. What was the effect of that Act? The Act was contemplated in all seriousness to benefit the indebted agriculturists but it did not really help them. The two sections of the Act, namely, sections 8 and 9, have come for a good deal of comment and a number of decisions on them have been given by the High Court. Two High Court Judges were appointed to go into those cases and they were the 'Legal Pandits of the Agriculturists.' They sat for three or four years continuously and they have been going on deciding questions of law and interpretation of sections 8 and 9. They said that the Act was ill-conceived and that under the present provisions of sections 8 and 9, agriculturists could not get any relief. The object with which that

[Sri S. Panchaksharam] [17th December 1954

Act was passed was, therefore, set at naught completely and the creditors had their day. If hon. Members would look into the High Court Reports of 1942, 1943, 1945 or 1946, every case they come across will be a case under the Agriculturists' Debt Relief Act and every case was against the spirit of sections 8 and 9. That is the fate of that Act. It was ill-conceived and the relief sought to be given to the ryots by the Government was not fully granted, but it was set at naught by the High Court.

" Again, when Rajaji was in office, this measure was brought in in 1953. It was the result of his obsession of moratorium, the magnificent obsession of Rajaji and the will was rushed through. At that time several defects were pointed out in this House but they were not heeded to and in the working of the Act we find now that there are several defects which could not be remedied. There was one provision when the Ordinance was promulgated and it was rightly conceived; it was that when protection was given to the agriculturist, the interest of the creditor also was safeguarded. The Ordinance said—there was a specific provision—that all alienations by the debtor during the continuance of the measure would be barred and invalidated. But when the Act replaced the Ordinance, that provision was watered down and it said that *bona fide* alienations could not be questioned in a Court of law. What are *bona fide* alienations? Let us take an example. A Brahmin gentleman wants to give his daughter in marriage. It is a sacrament with him and it is his religious duty. As an agriculturist he is not in a position to raise any credit. Therefore, what he does is, he sells away his land, worth about Rs. 4,000 for Rs. 1,000 and says that the purpose of the sale is to celebrate the marriage of his daughter. It is a legitimate purpose for which the document has been executed and no creditor whose payment has been put off by this Act can question the validity of the document. For the property has been sold away for a religious necessity. Therefore, the creditor cannot do anything and after the Act is dead, he will be practically in the streets. I took the case of a Brahmin because his daughter's marriage is a sacrament and religious duty and therefore he has got to find the money somehow or other. That is the case with a Brahmin, let alone the other people. That is the kind of lacuna that we find in the Act.

" Again, the fundamental rights guaranteed by the Constitution are solemnly worded that we have equality before law and equal protection of all laws. Do we find that equality in the Act? The Government themselves are there and the private creditor is also there. But the private creditor is not given protection while Government's interests are protected. In my own district, all sorts of loans have been advanced to the ryots, just as pipe and pump set loans, land improvement loans, cattle purchase loans, well sinking loans, manure loans and several other loans. These loans given by the Government have a priority over the loans advanced by private creditors. Is this equality before law?

17th December 1954] [Sri S. Panchaksharam]

" How can you have it? Can it be equality? Take another instance. Exemption is given to co-operative societies under this Act. As president of a co-operative society, I have been responsible for knocking off several properties in favour of the society to the detriment of the other creditors. They are not in a position to apply the principle of ratable distribution allowed by the ordinary law. This is one of the several defects noticed in the working of the Act. The agriculturist-creditor is a person who keeps an eye on the rural economy. The Bar Federation in its memorandum has submitted that it is not the rural agriculturists but crooks that have been benefited by this Act. I would request the Government to reconsider the whole matter . . ." 3-20 p.m.

Sri P. K. GOPALAKRISHNAN :—" May I know the time-limit fixed for each Member? "

DEPUTY SPEAKER :—" No time-limit has been fixed. However, I hope the hon. Member will try to finish his speech quickly."

* Sri S. PANCHAKSHARAM :—" I have had enough to say on this subject and I support the measure before the House. The Government require time to consider the several defects found in the Act in order to be able to bring in a comprehensive Bill. They have to think a hundred times and in hundred different ways to find out remedies for the defects and help genuine agriculturists."

DEPUTY SPEAKER :—" I fix five minutes for each Member because we have a number of Members to speak."

* Sri A. SENAPATI GOUNDER :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இப்பொது நமது சர்க்கார் கொண்டுவரக்கூடிய கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை கொண்டுவருவதுடன்கூட, 100க்கு 80 வீதம் உள்ள விவசாயிகள் எவ்வளவு கடன் தொல்லையால் அழிந்து போகிறார்கள், எந்தவிதமாக அப்படி வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க முடியும் என்பதை சர்க்கார் ஆலோசிக்கவேண்டும். எந்த அளவுக்கு விவசாயத்தை வளர்த்தால், அந்த வகையில் அவர்களுடைய கடனைத் கொடுக்க முடியும் என்று பார்க்கவேண்டும். மேலும் அவர்கள் விவசாயத்திற்கு வேண்டிய கடன்கள் கிடைக்க வழியும் எந்த வகையில் திருப்பிக்கொடுக்கவும் கூடிய வழிவகைகள் செய்வதுதான் இந்தச் சட்டத்தில் முடிவாக இருக்க வேண்டுமே தவிர நீண்ட நாளாக ஒத்தி வைத்துக்கொண்டே போவதில் பிரயோஜனமில்லை. ஒரு வருஷத்திற்கு ஒத்திவைத்து கடன் கட்டினால் போதும் என்று சொல்லிவிட்டால் இன்னும் ஒரு வருஷத்திற்கு அவர்கள் நிம்மதியாக இருக்கமுடியும் என்று நினைக்கலாம். மேலும் அவர்கள் விவசாயம் செய்வதற்கு ஏதாவது பணம் கிடைக்குமா என்றும் அந்த வழியைத் தீவிரமாக யோசித்து விவசாயிகளின் கடன் தொல்லையை போக்க அந்த வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" மேலும் நம் நாட்டில் 200 கோடி ரூபாய் கடன் சுமை நமது விவசாயிகளின் தலையில் இருக்கிறது. இந்தக் கடனை தீர்ப்பதற்குச் சட்டத்தில் வழிவகுக்க வேண்டும். மேலும் இப்போதுள்ள சட்டத்தை நீடிப்பதினால் விவசாயிகளுக்கு ஒருவித பலன் இருக்குமா என்று தெரியவில்லை. இன்னும் விவசாயிகள் தங்கள் விவசாயத்திற்கு வேண்டிய பொருள்களை வாங்க சக்தியற்றவர்களாக இருக்கிற நிலையில் 100-க்கு 60 சத விகிதம் நிலங்கள் தரிசுகளாக இருக்கின்றன. இதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சிந்தித்து இந்தச் சட்டத்தை அதற்குத் தகுந்தாற்போல் திருத்த

வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் 100-ல் 25 எக்கர் நிலம் உள்ளவர்களின் கடன் 18 கோடியாகவும், 25 லிருந்து 5 எக்கர் நிலம் வைத்திருப்பவர்களின் கடன் 80 கோடியாகவும் இருப்பதால், 5 எக்கர் நிலம் வைத்திருப்பவர்களே 60 கோடி கடன் கொடுக்கவேண்டி யவர்களாக இருக்கிறார்கள். இந்தக் கடனால் அதிகமாக பாதிக்கப்பட்ட வர்கள் சிறிய விவசாயிகள்தான். ஆதலால் கடன் கொடுக்கும்படியான ஸ்தாபனங்களை கிராமங்களில் ஏற்படுத்தி சட்டம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தக் கடன்களின் பளுவைக் குறைப்பதற்கு நமது ஐந்தாண்டு திட்டத்தில் விவசாயக் கடன்களைப் போக்க உள்ள ஒரு திட்டத்தை மேற்கொண்டு நமது நாட்டிற்கு நன்மை ஏற்படக்கூடிய வகையில் செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"மேலும் நிலச்சீர்த்திருத்தம் போன்ற மற்ற சட்டங்கள் கொண்டு வரும்போது, விவசாயிகளின் கடன் நிலையை போக்கி பிறகு கொண்டு வந்தால் மிகவும் நன்றாக இருக்கும். அதாவது ஒரு நல்ல பழத்தை பங்கிட்டுக் கொடுத்தால் அது நன்றாக இருக்கும். அப்படி இல்லாமல் அழுகிய பழத்தைக் கொடுத்தால் அதைச் சுவைக்க முடியாது. ஆதலால் இந்த நிலச்சீர்த்திருத்தம் விவசாயிகளின் கடன் சுமை இல்லாமல் இருக் கும் சமயத்தில் கொண்டு வந்தால்தான் அவர்களுக்கு நன்மை ஏற்படும். உடனடியாக இப்போது இரண்டு மாதங்களுக்குள் ஒத்திவைக்கப்பட்டாலும் நல்ல வகையில் விவசாயிகளின் கடன்களை குறைப்பதற்கு வழி செய்து, எந்த விதமான குறையும் இல்லாத நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்து இந்தச் சட்டத்தைக்கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

3-25 p.m. *Sri A. K. SUBBIAH :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இந்த விவாதத்தில் இருக்கக்கூடிய கடன் ஒத்திவைப்பு சட்டம் சம்பந்தமாக என்னுடைய யோசனையைச் சொல்லுவதற்கு விரும்பு கிறேன்.

"இன்றைக்கு ஒன்றுக்கு இரண்டு மடங்காக விவசாயிகளிடம் கடன் கொடுத்தவர்கள் எழுதி வாங்கிக்கொள்ளுகிறார்கள். சட்ட விரோதமாக பல இடங்களில் வட்டிகளை விவசாயிகளிடமிருந்து வசூல் செய்கிறார்கள். இந்த நிலைமையைப் போக்கவேண்டுமானால், விவசாயிகளின் இன்றைய நிலைமையை மாற்றி அமைத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். உண்மையில் விவசாயிகளுக்கு ஏதாவது நல்ல காரியம் செய்யவேண்டு மானால், அவர்களுக்கு இந்தச் சட்டத்தை மேலும் ஒரு வருஷத்திற்கு நீடிக்கவேண்டும். அந்த ஒரு வருஷத்து இடைக்காலத்தில் தாலுக்கா வாரியாக பொதுஜனப் பிரதிநிதிகள்கொண்ட ஒரு கமிட்டியை ஏற்படுத்தி எது நியாயமான கடன்கள், எது அநியாயமான கடன்கள் என்று பரிசீலனை செய்து நியாயமான கடன்கள் எது என்று நிர்ணயித்து விவசாயிகளின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு பல தவணை களில் விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதற்கு ஏற்பாடுகள் செய்வதற்கு இந்தச் சட்டத்தை திருத்த வேண்டும்.

"சுமார் 250 கோடி ரூபாய் விவசாயிகளின் தலையில் சுமத்தப் பட்டிருக்கிறது என்பதை சர்க்கார் மறுக்கமுடியாது. விவசாயிகள் எப்படி அந்தக் கடனைக் கொடுப்பது என்று திசை தெரியாமல் தவித்துக்கொண் டிருக்கிறார்கள். வேண்டுமென்றே வக்கீல்கள் தங்கள் வருமானம் குறைந்துபோய்விடுகிறதே என்ற காரணத்தால் லேவாதேவிக் கொள்ளை லாபக்காரர்களும் இந்தச் சட்டத்தை நீடிக்கக்கூடாதென்று கிளர்ச்சி செய் துக் கொண்டிருக்கிறார்கள். எப்படியும் இந்தச் சட்டம் காலாவதியான பிறகு அவர்களைக் கட்டிப் பிழிந்து வசூலிக்க வேண்டுமென்று ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். விவ்சாயிகளின் ஆடுமாடுகளை ஜப்தி செய்வார்கள். சொத்துக்களை சூறையாடக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள்.

"நாம் விவசாயிகளுக்கு என்று இந்தக் கடன் ஒத்திவைப்புச் சட்டத் தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதனால் பெரிய நிலப் பிரபுக்களும் பலனடைகிறார்கள். அதனால் ஏழை விவசாயிகளுக்கு கஷ்டங்கள் ஏற் படுகின்றன. சில நிலப் பிரபுக்கள் லட்சக்கணக்கான ரூபாய் கடன் வாங்கி

17th December 1954] [Sri A. K. Subbiah]

இந்தச் சட்டத்தின் மூலம் அவர்கள் பாதுகாப்பு கேட்கிறார்கள். அது சரியல்ல. இந்தச் சட்டம் ஏழைகளுக்கு மட்டும் தான் பாதுகாப்பு அளிக்கக் கூடியதாக இருக்கவேண்டும். நிலப்பிரபுக்கள்கூட கடன் வாங்கி இந்தச் சட்டத்தின் மூலம் ஏழைகளை ஏமாற்றி விடுகிறார்கள். அப்படி இருக்கக்கூடாது. விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் முறையில் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. சாதாரணமாக ஏழை விவசாயத் தொழிலாளர்கள் கடன்களையும் இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வரும்படியாக சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

"அது மாத்திரம் அல்ல, விவசாயிகள் தங்களுடைய விவசாய அபிவிருத்திக்காகவும் இன்னும் அவர்களுடைய குடும்பச் செலவிற்காகவும் நாம் அவர்களுக்கு ஏதாகிலும் உதவி செய்ய வேண்டும். அதற்கு சர்க்கார் ரிவினியு டிபார்ட்மெண்ட் மூலமாகவும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் குறைந்த வட்டியில் கடன் கொடுத்து அதை நீண்டகால தவணையில் வசூலிக்கும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அந்த முறையில் சட்டத்தைத் திருத்தி அமைத்து அதன் மூலம் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். மற்றும் இந்த சட்டத்தை இன்னும் ஒரு வருஷத்திற்கு நீடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்."

* **Sri K. R. NALLASIVAM** :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுதுள்ள இந்தக் கடன் ஒத்தி வைப்புச் சட்டம் சம்பந்தமாக என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல விரும்புகிறேன். (3-30 p.m.) இன்றைக்கு முதல் ஐந்தாண்டு திட்டம் முடிவடையப் போகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கும்பொழுது நாம் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தக் கடன் பளுவானது பெரும்பாலும் நஞ்சைப் பிரதேசத்தில் இல்லை, புஞ்சைப் பிரதேசத்தில் தான் இருக்கிறது. புஞ்சைப் பிரதேசங்களில் இருக்கும் விவசாயிகளிடம் தான் கடன்காரர்கள் ரூ. 100 கொடுத்துவிட்டு 150-க்கும் 200-க்கும் எழுதி வாங்கி இருக்கிறார்கள். அதனால் இந்தக் கடன் தொல்லையானது புஞ்சைப் பிரதேசத்தில் தான் அதிகமாக இருக்கிறது. இந்த ஐந்தாண்டு திட்டத்தினால் புஞ்சைப் பிரதேசத்திலுள்ள நிலங்கள் எல்லாம் நஞ்சையாக மாறப் போகிறது. அதனால் அங்குள்ள கடன் வாங்கிய விவசாயிகள் எந்த முறையில் பாதிக்கப்படுவார்கள் என்பதை கொஞ்சம் யோசனை செய்து பார்க்க வேண்டும். இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதாவின் மூலம் மார்ச் வரையில் நீடிக்கப்படுகிறது. அதற்குப் பதிலாக இன்னும் ஒரு வருஷ காலத்திற்கு இந்தச் சட்டத்தை நீடிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த ஒரு வருஷத்தில் இந்த மாகாணத்திலுள்ள கடன் நிலைமையை ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வருவதற்கு வேண்டிய அவகாசம் ஏற்படும். அதற்காக ஒரு கமிட்டியை நியமித்து அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். அப்படி ஒரு முடிவிற்கு வராமல் மேலெழுந்தவாரியாக இருந்து விட்டால், இந்த சமுதாயத்திலுள்ள பல கோளாறுகள் அப்படியே நின்று போய் விடும். இன்று புதிது புதிதாக நீர்ப்பாசன வசதிகள் வருகின்றன. புஞ்சைப் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் கடன்காரர்களாகி இருக்கிறார்கள். அப்படி நீர்பாசன வசதி வந்தால் இந்த விவசாயிகளால் அந்தப் பலனை அனுபவிக்க முடியாமல் போய் விடும். அந்த நிலையில் இந்த விவசாயிகள் இருக்கின்றார்கள். அவர்களுடைய கடன்கள் எல்லாம் தீர்க்கப்படவேண்டும். அந்தக் கடன்களெல்லாம் இறுதியாகத் தீர்க்கப்பட்டால் தான் அவர்கள் நல்ல முறையில் வாழ்க்கையை நடத்த முடியும். ஆகவே அவர்கள் வாங்கிய கடனை தவணை முறையில் கொடுக்கும்படியாக சட்டம் இயற்றினால் அவர்கள் அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்கச் சௌகர்யமாக இருக்கும். ஆகவே இந்தச் சட்டத்தை இன்னும் ஒரு வருஷத்திற்கு நீடித்து விவசாயிகளின் கடன் நிலையை பரிசீலனை செய்து ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மறுபடியும் ஒரு வருஷத்திற்கு இதை நீடித்தால் அதற்குள் நாம் ஒரு முடிவிற்கு வர முடியும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அது மாத்திரம் அல்ல, இன்றைக்கு விவசாயிகளுடைய கடனைப் பற்றி எல்லோரும் விரிவாக சொல்லி விட்டார்கள். இன்றைக்கு இருக்கும் நிலையில் இந்தச் சட்டத்தை ரத்து செய்து விட்டால் பெருவாரியான குடும்பங்கள் அழிந்து போய் விடும். ஏனென்றால் அவர்களிடம் ரூ. 100 கொடுத்துவிட்டு ரூ. 500-க்கு எழுதி வாங்கி இருக்கிறார்கள். அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றால் அவர்களால் மீண்டு வரமுடியாது. அதனால் இந்தச் சட்டத்தை இன்னும் ஒரு வருஷத்திற்கு நீடித்தால் அந்த மாதிரியான கடன்கள் எப்படி வந்தது, என்பதை பரிசீலனை செய்ய வசதியாக இருக்கும். அவ்விதம் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டியையும் ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பல குடும்பங்கள் நாசமாகி விடும். அவர்கள் அழிந்து போகும் நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே இந்தச் சட்டத்தை இன்னும் ஒரு வருஷத்திற்கு நீடித்து வைத்து ஒரு கமிட்டியை அமைத்து அதாவது சகல கட்சிகளும் அடங்கிய ஒரு கமிட்டியை அமைத்து, இதைப் பரிசீலனை செய்து காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்."

*Sri S. THINAKARASAMY THEVAR :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று விவாதத்திலுள்ள கடன் வாய்தா ஒத்தி வைப்பு மசோதாவைப்பற்றி சில வார்த்தைகளைச் சொல்லப் பிரியப் படுகிறேன். உண்மையிலேயே இந்த மசோதா விவசாயிகளுக்கு அவசிய மான அனுகூலம் கிடைக்கக் கூடியது என்று பலர் பேசியிருக்கிறார்கள். மற்றும் பலர் இந்த மசோதாவினால் விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க வில்லை, கடன் கொடுப்பதும் அடியோடு ஒழிந்து விட்டது, விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பவர்கள் இப்பொழுது இல்லை என்றெல்லாம் பேசப்பட்டது. இந்த மசோதா போன வருஷம் வந்த காலத்திலும் பலர் பலவிதமாகப் பேசி விட்டார்கள். இதனால் மக்கள் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்களென் றும் பேசி விட்டார்கள். நான் சொல்வது என்னவென்றால் நமக்கு வேண்டியது கொடுத்த கடனைத் திருப்பி வசூலிக்க வேண்டும், அதுவும் நியாயமாக வசூலிக்க வேண்டும். கடன் வாங்கியவன் தான் வாங்கிய கடனை ஒழுங்கான முறையில் கொடுக்கவேண்டும். அதையும் கடன் கொடுத் தவன் நியாயமான முறையில் வசூலிக்க வேண்டும். அதற்கு உதாரண மாக ஒன்று சொல்லுகிறேன். மாட்டினிடமிருந்து நாம் பாலைக் கரக்க வேண்டுமென்றால் மாட்டிற்கு நாம் ஆகாரம் போடவேண்டும். அப்பொழுது தான் மாடு நமக்குப் பால் கொடுக்கும். நாம் மாட்டிற்கு ஆகாரம் போடாவிட்டால் மாடு நமக்கு பால் கொடுக்காது. நல்ல முறையில் நாம் பாலைக் கரக்க முடியாது. ஆகாரமே கொடுக்காமல் பால் கரப்பது என்பது முடியாது. அதைப்போலவே விவசாயி க்ஷீண திசையில் இருந் தால் நாம் அவனிடமிருந்து கொடுத்த கடனை திரும்ப வாங்க முடியாது. ஆகையால் கடன் கொடுத்தவன் தன்னுடைய கடன் திரும்பி வரவேண்டு மென்றால் அவன் கடன் கொடுத்த விவசாயி நல்ல நிலைமையில் இருக்கும் படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் அவன் கொடுத்த கடன் திரும்பி வரும். ஆகவே கடன் கொடுத்தவன் தான் விவசாயினுடைய க்ஷேமத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

" ஆகவே இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். இன்றைக்கு விவசாயினிடம் திடீரென்று கொடுத்த கடனை வசூலிக்க ஆரம்பித்தால் உண்மையாகவே விவசாயிக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும். அப்படி விவசாயிக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டால் அவன் தான் வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க முடியாது. விவசாயிக்கு அந்த நிலைமை ஏற்படாதிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்."

DEPUTY SPEAKER :—" தயவு செய்து நீங்கள் உட்காருங் கள். கனம் ராமலிங்கம் ஏதோ சொல்ல வேண்டுமாம்."

17th December 1954]

SRI S. RAMALINGAM :—" ஸார், கனம் மெம்பர் அவர்கள் பேசும்பொழுது அவர் சொல்வது எப்படி இருக்கிறது என்றால் கசாப்புக் கடைக்காரர் ஆட்டை பாதுகாக்க வேண்டுமென்று சொல்வது போல் இருக்கிறது. அதைப்போல கடன் கொடுத்தவர்கள் விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் என்று சொல்லுகிறாரா என்று கேட்கிறேன்."

* SRI S. THINAKARASAMY THEVAR :—" நான் அதற்குப் பதில் சொல்லத் தயாராக இல்லை. அவர் சொல்வதற்கு பதில் சொல்லிக்கொண்டிருந்தால் எனக்குக் கொடுத்த அவகாசம் முடிந்து விடும். இன்றைக்கு இருக்கும்படியான பிரச்னை விவசாயிகள் நல்ல நிலைமையில் இருக்க வேண்டும். சர்க்கார் அதற்கு உதவி செய்ய வேண்டும். உண்மையில் சர்க்காருடைய எண்ணம் என்னவென்றால் விவசாயிகளுக்குப் போதுமான அவகாசம் கொடுத்து அவர்கள் நல்ல நிலைமைக்கு வந்து அதன் பின் அவர்களிடமிருந்து வசூலித்தால் நல்லதாக இருக்கும் என்பதுதான். இதனால் விவசாயிகளுக்கு கெடுதல் இல்லை. விவசாயிகள் சுபிட்சமாக வாழும் காலம் வரையில் கடன் கொடுத்தவனை பொறுத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்கு ஒரு அனுகூலம் பண்ணவேண்டும் என்றுதான் இந்த மசோதாவைச் சர்க்கார் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி இல்லாமல் வேறு முறையைக் கையாண்டால் இரண்டு பேர்களுக்கும் நஷ்டம் ஏற்படும். 3-40 p.m.

" அடுத்தபடியாக சொல்லும்போது பலர் இந்தச் சட்டத்தினால் அனாவசியமான அனுகூலம் அடைகின்றார்கள் என்று சொன்னார்கள். ஏராளமாக வியாபாரம் செய்கின்றவர்களும் லட்சக்கணக்கான பணம் வைத்துக் கொண்டிருக்கக்கூடியவர்களும் இரண்டொரு ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருப்பதனால் இந்தச் சட்டத்தின் மூலம் சலுகை அடைந்து வருகிறார்கள் என்று கூறினார்கள். அந்த மாதிரி இல்லாமல் சர்க்கார் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்குத் தக்கபடி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். உண்மையிலேயே யார் விவசாயி, கடன் எதற்காக வாங்கி இருக்கிறான், விவசாயத்திற்காக வாங்கிய கடனை என்பனவற்றையெல்லாம் பரிசீலனை செய்து அதற்குத் தகுந்த முறையில் இந்த மசோதாவைத் திருத்தி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது விவசாயிகள் மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கிறார்கள். உண்மையில் அவர்களுக்கு ஒரு வருஷ காலம் தவணை கொடுத்தால் அவர்களுக்கு நாம் ஒரு நல்ல காரியத்தைச் செய்வதாகும். ஏனென்றால் இப்பொழுதே அவர்கள் கஷ்ட நிலையிலிருக்கிறார்கள். அவர்களுக்குக் கடன் பளு ஜாஸ்தியாக இருக்கிறது. அது இன்னும் ஜாஸ்தியாகி விடும்."

* SRI P. RANGASWAMI REDDIAR :—" Mr. Deputy Speaker, Sir, though the word ' agriculturist ' is frequently mentioned in the House and though much is sought to be made by hon. Members of the difficulties of agriculturists—whose interests some pretend to protect—I am afraid Government have not taken any real interest in collecting statistics as to who really are the persons that are sought to be benefited by this Act and who are the persons who are actually benefited by it. That is the most important point. The Bill now introduced here seeks to extend the life of the Act only by a few days as the Assembly will not be in session when the present Act expires. But the Government ought to have borne in mind the interpretation put by the highest judicial authority in the State with regard to the definition of the terms ' debt ' and ' agriculturist '. To cite an instance, if an agriculturist has borrowed Rs. 1,000 for the purpose of the marriage of his son or daughter, that debt, according to the latest ruling of the High Court reported in 67 Law Weekly, 1027, does not come

[Sri P. Rangaswami Reddiar] [17th December 1954

within the definition of ' debt ' in Act V of 1954.' This is a most extraordinary interpretation to any person who knows interpretation of statutes because the Act seeks to provide some benefit to a class of persons who may be called agriculturists. The Act does not make any distinction between debts contracted for agricultural operations and debts contracted for non-agricultural purposes. The interpretation of the statute by the highest judicial authority in the State is most wonderful. Therefore, this defect must be remedied. Without remedying this, what is the use of extending the life of this measure? If a cinema operator or a bus operator or a mill-owner or a piecegoods merchant or a commercial dealer rolling in lakhs and lakhs of rupees owns two or three cents of land somewhere and styles himself as an agriculturist, he can get the benefit of the Act, and real agriculturists who are very poor cultivators and who have lent their money to these wonderful ' agriculturists ' will not get any benefit. According to this Act, the real agriculturists who rely on their labour and income from the land cannot get back their money. Of course, hon. Members may be under the impression that there is an exception provided in the definition of ' agriculturist ', that is, those who pay income-tax are exempted. But we know how many persons, who ought to pay income-tax actually pay it and how many persons, who may not at all like to call themselves agriculturists want to call themselves so, in order to evade repayment of loans. Therefore, the real question is which is the class that requires protection for the purpose of stepping up production of food. It is their interests that should be safeguarded. When the Bill was introduced last year, it was stated that it would be a temporary measure designed to meet an emergency. Now the emergency has ceased. When it has ceased, the Government are not justified in extending the life of the Act as it is because it would be an unreasonable restriction put on the people regarding Article 19 (*f*) of the Constitution. The question has to be examined by the Government whether there is still an emergency in the changed circumstances of to-day. We must consider whether, in the absence of such examination, it is proper on the part of this Legislature to extend the life of the Act. Our Legislature cannot arbitrarily assume an emergency when there is really no emergency. If still we pass the Bill, then there is every likelihood of the Act being questioned in a Court of Law and I am afraid it may ultimately be held *ultra vires* of the Constitution. I, therefore, suggest that this Act as it is be allowed to lapse. If the Government are anxious to protect real agriculturists engaged in cultivation, let them bring in a new measure to protect them and not all classes of people as they have done at present.

" Sir, some time ago I wrote a letter to the Hon. the Minister for Law pointing out certain defects in the Act itself. Because of the latest decision of the High Court, judges in mufassal courts refuse to recognize anything as debt unless the mortgage deeds or the pro-notes make mention of the loan being borrowed for agricultural purposes. They say that in the absence of such a clear

17th December 1954] [Sri P. Rangaswami Reddiar]

statement in the documents, they are not entitled to the benefit provided for in the Act. So, Sir, so far I am concerned, I do not think there is any necessity for extending the life of the Act by a few days.''

SRI S. SWAYAMPRAKASAM :—" மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவாதிக்கப்படும் இந்த மசோதா மிக மிக முக்கியமானது என்பது இங்குள்ள எல்லாக் கட்சியினரும் இதில் பங்கெடுத்துக்கொள்வதிலிருந்து தெரிகிறது. மேலும், இந்த ராஜ்யத்திலுள்ள மக்களுடைய கவனம் எல்லாம், அரசாங்கம் இன்றைய தினம் என்ன செய்யப் போகிறது என்பதில் தான் இருக்கிறது. செய்தித் தாள்களிலும் இது விஷயமாக அடிக்கடி செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. எங்களுக்கும் தினசரி ஏதாவது கடிதங்கள் இது சம்பந்தமாக வந்துகொண்டிருக்கின்றன. அரசாங்கத்திற்கும் அப்படியே கடிதங்கள் பெரும்பாலான மக்களிடமிருந்து வந்துகொண்டிருக்குமென்று நான் நினைக்கின்றேன். அது எதனைக் காட்டுகிறதென்றால் பொருளாதாரத் துறையில் இந்த நாட்டு மக்கள் இன்றைய தினம் இருக்கக்கூடிய நிலைமையைத் தான் காட்டுகின்றது. இந்த மசோதாவை நோக்கி இருக்கின்றவர்கள் யார் ? கடன் கொடுத்தவர்களும் சரி, கடன் வாங்கியவர்களும் சரி, இரு சாரார்களும் இன்றைய தினம் அரசாங்கம் என்ன செய்யப்போகின்றது என்பதைப் பார்த்துக் கொண்டே இருக்கின்றார்கள். 3-47 p.m.

" இந்த மசோதாவைக் கொண்டு வந்த காலத்திலே என்ன காரணம் சொல்லப்பட்டது ? ' பல வருஷங்களாக மழை இல்லாமல் இந்த நாட்டிலே மக்கள் துன்பப்பட்டார்கள். திடீரென்று இப்பொழுதுதான் ஏதோ மழை ஆரம்பித்து மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கவனமெல்லாம் விவசாயத்தைத் தவிர மற்ற விஷயங்களில் செல்லக்கூடாது. கடன் பளுவினால் தவித்துக்கொண்டிருக்கும் விவசாயிகள் கடன் கொடுத்தவர்களுக்கு இரையாகி, கோர்ட்டுகளுக்கும் கச்சேரிகளுக்கும் அலைந்துக்கொண்டிருக்கக்கூடாது '' என்ற ஒரு நோக்கத்திலே அன்றைய தினம் இந்த மசோதா கொண்டுவரப்பட்டது.

" விவசாயத்திற்காக கடன் வாங்கியிருக்க வேண்டுமென்று அன்றைய தினம் சொல்லவில்லை. விவசாயி ஒருவன் எதற்காக கடன் வாங்கியிருந்தபோதிலுங்கூட, விவசாயத்தில் ஈடுபடவேண்டுமென்ற காரணத்தினாலேயே தான் எந்தக் கடனையும ஒத்திவைக்கவேண்டுமென்று அன்றைய தினம் சொல்லப்பட்டது.

" எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ ரங்கசாமி ரெட்டியார் சொல்லும்போது கோர்ட்டில் விவசாயி விவசாயத்திற்காக கடன் வாங்கப்பட்டதா இல்லையா என்ற தீர்ப்பைப் பற்றிக் கூறினார்கள். ஜட்ஜ்களும் சரி பேசியவர்களும் சரி அதைச் சரியாகப் பார்த்திருக்கமாட்டார்களோ என்பதுதான் என்னுடைய எண்ணம். ஏனென்றால், அன்றைய தினம் நிச்சயமாகவே சொல்லப்பட்டது கடன் விவசாயத்திற்கு வாங்கிவிடுவது இல்லை என்று. விவசாயி எந்த முறையிலே கடன் வாங்கியிருந்தாலுங்கூட அவனுடைய எண்ணம் பூராவும் விவசாயத்திலேயே ஈடுபடவேண்டுமென்ற காரணத்தினாலும், அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடும் தான் அன்றைய தினம் கொண்டுவரப்பட்டது. இப்பொழுது ஒரு ஆண்டு ஆகிவிட்டது. இந்தச் சட்டம் அமுலில் இருந்து அதிலிருந்து ஒரு விதமாக அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இப்பொழுது இதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

" உள்ளபடியே எதற்காக யாருக்கு இந்த உதவி வேண்டும் என்று தான் ஆலோசித்து பார்க்கவேண்டும். ஒரு விதத்தில் நாம் ஆனந்தப்படவேண்டிய விஷயம்தான். அரசாங்கம் இந்த மசோதாவை சிறிது காலத்திற்கு நீடித்து, அதற்குள் விரிவான ஒரு மசோதாவைக் கொண்டுவர உத்தேசித்திருப்பது ஒரு விதத்தில் சந்தோஷப்படவேண்டிய விஷயம்தான். ஆனால் அந்த விஷயத்தை வெகு நாளைக்கு முன்னு

லேயே தீர்மானம் செய்து இந்தச் சட்டத்தை இதுவரைக் கொண்டுவந்திருக்க லாம். அதற்காக ஏதோ சால்ஜாப்பு சொல்லிவிட்டு காலதாமதம் செய்து இன்னும் 25 நாள் மட்டும் அவகாசம் வேண்டுமென்று பிப்ரவரி 5-ம் தேதி யோடு முடிவடையும் இந்தச் சட்டத்தை பிப்ரவரி இறுதிவரை நீடித்து அப் புதுச்சட்டம் கொண்டுவரவேண்டும் என்பதற்காக இதை ஏன் நீடிக்கவேண்டும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. உண்மையிலேயே அக்கரைக்கொண்டி ருப்பார்களேயானால் இதில் ஏன் இவ்வளவு காலம் தூங்கிவிட்டு 25 நாளைக்கு நீட்டிவைக்கவேண்டுமென்று சொல்வதுதான் எனக்குப் புரியவில்லை. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் கடன் கொடுத்தவர்கள் பிப்ரவரி 5-ம் தேதிக்குப் பிறகாவது கொடுத்த கடனும் வட்டியும் வருமா என்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், கோர்ட்டில் தாவா செய்வதற்கு.

"கடன் கொடுக்கவேண்டியவர்கள் என்ன நினைக்கிறார்கள். சட்டம் இன்னும் நீடிக்கப்படுமா, நீடிப்பு எத்தனை நாளைக்கு என்றெல்லாம் விவசாயிகளின் மனதில் ஆவல் தோன்றியிருக்கிறது. அவர்களுக்கு ஏற் பட்டிருக்கக்கூடிய கடன்களை ஈடுசெய்வதற்கு அரசாங்கம் என்ன செய்யப் போகிறார்கள் என்ற எண்ணம் அவர்களிடத்தில் குடிகொண்டிருக்கிறது. அதனால்தான் நான் சொல்லுகிறேன். அவர்களுடைய எண்ணங்களைப் பூர்த்தி செய்யவேண்டுமென்றால் இந்தச் சட்டத்தை நீடித்தால் மட்டும் போதாது. இன்றைய தினம் அதைத்தான் நாம் செய்கிறோமே தவிர, அவர்களுடைய கடன்கள் அடைபடக்கூடிய வழி வகைகளைப்பற்றி நாம் இதுவரையில் யோசிக்கவில்லை. சாதாரணமாக இந்தச் சட்டத்தை எடுத்துக் கொண்டால், ஒரு பெரிய லேவாதேவிக்காரன் ஒரு ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருந்தாலும் அவன் விவசாயி என்று இந்த சட்டத்தில் கருதப் படுகிறான். அப்படி அவனிடத்தில் அந்த நிலம்கூட இல்லை என்றால், அவன் ஒரு ஏக்கர் நிலத்தையாவது குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, இந்த சட்டத்தின்கீழ் கொண்டுவந்துவிடுகிறான். ஆகையால் இதுபோன்ற சட்டம் இந்த மாதிரியான லேவாதேவிக்காரர்களுக்குத்தான் லாபம். இன்று கிராமத்தில் இருக்கக்கூடிய சாதாரண விவசாயிகளுக்கு ஒருவிதத்தில் கூட்டு கடனை அடைப்பதற்கு வழியில்லை. உதாரணமாக ஒரு சிறிய விவ சாயிக்கு ரூபாய் 100 ஒருவனிடத்திலிருந்து கடன் வாங்கியிருப்பான். ஆனால் இந்த விவசாயியே இன்னொருவனுக்கு ரூபாய் 100 கடன் கொடுத்து இருப் பான். ஆனால் இந்த விவசாயிக்கு அவசரமாக பண நெருக்கடி ஏற்பட்டு ரூ. 100 வேண்டுமென்றால், இவன் கடன் கொடுத்த இடத்தில் வாங்க முடியாமற்போகிறது. ஆகவே இம்மாதிரி சாதாரண விவசாயிகள் கடன் வாங்கின இடத்திலும் கடன் கொடுக்கமுடியவில்லை. கடன் கொடுத்த இடத்திலிருந்தும் பணம் திரும்பப் பெற முடிவதில்லை.

"உதாரணமாக எடுத்துக்கொள்வோம். இச்சட்டத்தின் பிரகாரம் நிலத்தை உழுபவர்கள் எரு, விதை, மாடு முதலியவைகள் வாங்கவேண்டும். இதற்குக் கடன் வாங்கவேண்டியதாக இருக்கிறது. ஆனால் இப்போதைய நிலையில் கடன் கொடுக்க யாரும் இல்லை. இன்றைய தினம் விவசாயிகள் கடன் வாங்க முடியாமல் அல்லற்படுகிறார்கள், தவிக்கிறார்கள். இந்த நிலையில் நாம் அவர்களுக்கு பண உதவி அளிப்பதை தவிர வேறு வழியில்லை அல்லது கடன் வாங்குவதற்குமாற்று வழிகளுக்கு வகை செய்யவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு பலன் அளிக்க முடியும். அவ்வாறு செய்வது அன்றைய சட்டத்தின் நோக்கமல்ல. இன்றைய சட்டத்தின் நோக்கமும் அதுவல்ல. ஆகையால் ஏதாவது நிவாரணம் அளிக்கவேண்டுமானால் அதை உடனடியாக பணம் மூலமாகவோ அல்லது வேறு வழிகளிலோ உதவி செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும். இம்மாதிரி விஷயங்களை கவனித்து ஒரு திருத்த சட்டம் கொண்டுவருவோமேயானால் அது சாதாரண விவசாயிகளுக்கு எவ்வளவோ உதவி செய்வதாக இருக்கும். இந்த சட்டத் தில் மட்டும் இன்னும் ஒரு வருஷத்துக்கோ அல்லது ஒரு மாதத்துக்கோ நீடித்து வைத்தால்மட்டும் போதாது. ஏனென்றால் விவசாயிகளினுடைய கடனும் நீடித்துக்கொண்டே போகும். அவர்கள் விவசாய தொழில் செய்வதற்கு வேண்டிய பணம் யாரிடமும் கடனாக வாங்க முடியாது. இந்த சட்டத்தினால் நாம் பணம் கொடுக்கிறவர்களிடம் ஒரு வித பயத்தை உண்டு

17th December 1954] [Sri S. Swayamprakasam]

பண்ணியிருக்கிறோம். ஆகவே இந்தச் சட்டத்தை மேலும் 25 நாட்களுக்கு நீடித்தால் மட்டும் போதாது. இன்னும் இரண்டு மாதத்திற்குள் விவசாயிகளுக்கு நன்மை பயக்கக்கூடிய ஒரு திருத்த மசோதாவைக் கொண்டு வருவார்கள் என்று நினைத்து ஒருவிதத்தில் இந்த மசோதாவை ஆதரிக்க விரும்புகிறேன்."

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Mr. Deputy Speaker, Sir, this very subject we discussed yesterday also. The only difference is we discussed it yesterday in a non-official atmosphere and to-day we are discussing it in an official atmosphere. The subject is the same. I think it will be somewhat useful if we understand the background and the genesis of this Act. As I said, this was intended as a special measure for a special purpose. I may give a little illustration. Sometimes in a country, martial law is imposed. It is imposed in order to meet a special emergency. Then the normal law, and the normal civil administration, is suspended. But after the object for which martial law was imposed was over, the suspension of the normal law is removed. There are certain advantages under martial law like speedy disposal of matters and firm action. But because of these advantages it is not extended longer than what is absolutely necessary. Similarly, this being a special measure for a special purpose, this should not be extended beyond the period for which it is actually required and necessary. 4 p.m.

" Now, Sir, I may read what the then Hon. Chief Minister said last year when this legislation was discussed, so that we may clearly understand the scope of this Act. He said—

> **' Let me make it categorically clear on the floor of the House that it is not the policy or intention of the Government to wipe off these debts progressively. It is necessary to maintain the credit of the agriculturists and cultivators and it is necessary therefore not to wipe out debts and create an impression that the man or the Bank who lends his money would lose the money. I may make it perfectly clear on this occasion that our intention is only to give time strictly in the sense of a moratorium. It is not the intention to wipe off debts. The object of the Bill as stated, will be stuck to, namely, to give time, a temporary moratorium in respect of those classes who are likely to suffer. '**

That is the object with which this legislation was passed. Some hon. Members, those sitting in the opposite benches, have expatiated on the scope of scaling down debts and wiping off debts and so on. Those things do not come under this Act. My submission is that the Bill before us is mainly intended to extend the time-limit of the previous Act by about a month. That is all. It is only a temporary piece of legislation."

SRI P. RAMAMURTHI :—" Nobody on this side has suggested as the Hon. Minister at any rate had credited us. I do not think anybody on this side suggested like that. I do not think we, on this side, contradicted the scope of the Bill and the wonderful intentions of Government."

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :— " How can I accept what the hon. Leader of the Opposition says when he was here only for some time yesterday and had come here

to-day only now? He does not know what has happened in his absence. Certain hon. Members did make such observations." (Laughter.)

SRI P. RAMAMURTHI :—" I may inform the Hon. Minister that even as a Minister is able to follow the proceedings of the House when he is not present, we on this side also are able to follow the proceedings of House, word for word, in our absence. We have made arrangements for that." (Opposition cheers.)

SRI S. PANCHAKSHARAM :—" That is wrong, Sir. The Hon. Minister who is in charge of this Bill has always been present here. He was bodily and mentally present here all along." (Laughter.)

SRI S. RAMALINGAM :—" On a point of Order, Sir. The hon. Member says that the Hon. Minister was mentally present. I do not know how he understood it." (Laughter.)

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" I did not know till now that the hon. Leader of the Opposition was also advanced in telepathy. I think it will do him much good since he has to correspond with countries far away. (Laughter.)

" I admit that the definition of the word ' agriculturist ' has been very wide and gave room for certain drawbacks, I may say malpractices. We know it. But still, we deliberately adopted that definition because we wanted to avoid any litigation on the score as to who is an agriculturist or not. On that ground, we did not want to encourage litigation. That is why we made the definition very wide. Even though some other people who ought not to be protected did come under that definition, it did not matter for the large body of agriculturists, and cultivators were protected. That was the point. I know certain instances wherein some well-to-do people have sought protection under this Act. I know one zamindar (Sri S. Ramalingam : ' Name, Sir '). It is not in the public interest to disclose the name, even though his zamin is abolished, he still possesses some land who spends his money lavishly and—had borrowed much and evaded his creditors seeking protection under this Act. He presented a petition that as an agriculturist coming under the scope of this Act, he should be protected. I know another instance where one gentleman took a loan of two lakhs. Simply because he possessed a small patch of land, under this Act he is still evading his creditor. So we have to decide how best to restrict the wide meaning of the word ' agriculturist ' with regard to protecting his indebtedness. I hope all the legal acumen of the hon. lawyer Member would be available for that purpose.

" Another aspect we should bear in mind is that after the passing of the Act the rural credit system has broken down. There is no gainsaying that. It is now very difficult for the poor man, the poor cultivator, to get money. The other day a large number of hon. Members narrated how difficult it is for a poor

17th December 1954] [Sri M. A. Manickavelu Naicker]

cultivator to get even Rs. 100 for purchasing a pair of bullocks or to buy manure or seed. That is a fact. In the rural parts it is difficult to find money because if one were to lend money to an agriculturist there is always the lingering fear in his mind that at any time the Legislature may suddenly pass an Act wiping off all the debts of the agriculturists. They have got that substantial fear. That is why they do not lend money. Rural credit cannot be met by co-operative banks alone. The requirements of the agriculturists are so great that only private rural credit will help them to a large extent, especially in the villages. Therefore, we should see that this rural credit system is not jeopardised.

" Some people spoke about the Agriculturists' Debt Relief Act of 1938. That is an Act altogether different from this. That Act was for scaling down debts. Therefore, it is an entirely different Act. Some hon. Members have confused themselves deliberately while some were confused because they did not know the correct scope of the previous Act.

" The charge was levelled that in bringing about lelgislation, Government should appoint a committee of this House to go into the matter and not depend upon the report of a Committee of their own party-men. I hope all hon. Members would admit that that party runs the Government, and so bears the burnt of administration. When that is the fact, why should not they consider the views of their own party first? It is not as if the views of hon. Members of this House would not be taken note of or would be unattended to. It does not mean that we shut the door to the Opposition in regard to their view-points. Certainly when the comprehensive Bill is brought before the House, the views of each and every party represented in the House would be taken into consideration. If it is found absolutely necessary we would refer it to a Select Committee. There is nothing preventing them from offering their views to the Select Committeed.

" The hon. Member, Mr. Panchaksharam, said that the moratorium did not apply to co-operative and Government loans. There is reason why Government and Co-operative Banks are exempted. The co-operative bank and the co-operative administration is intended for the good of the people. The money goes for giving capital to the people in the rural parts for agriculture and other purposes. Another reason is that a bank is not like an individual. The private lender does not care for the benefit of the man to whom he lends his money. But a Co-operative bank is not like that. It lends money to help the agriculturist and the ryot. The Co-operative banks unlike private individuals do not harass the ryots. The money collected from one ryot who re-pays his dues is utilised for lending to another who is in need. Therefore it is necessary that we should not stop them from collecting the dues from the ryots, for after all that money is further utilised in helping the ryots only. In a Welfare State, the Government exists for the sake of the people and as such, dues to Government should not be delayed because the

[Sri M. A. Manickavelu Naicker] [17th December 1954

dues when collected are after all going to be utilised in another public sector. When we see how many times recovery of takkavi loans and well-subsidiers are postponed, one could easily infer that Government are not there to harass the people.

4-10 p.m. "Therefore, there is no fear that the Government would harass the people. That is why in the case of these two categories of debts the Government thought that they could be collected. This matter has already been discussed at length and I do not want to take up the time of the House. I would therefore request hon. Members to pass this short Bill which extends the life of the present Act by a few days only. Within that time we will all put our heads together and see that a very reasonable piece of legislation is enacted. As pointed out by the hon. Member, Sri Swayamprakasam, those persons who are taking advantage of the provisions of the Act and are escaping, will also be brought in. I particularly request the hon. Member Sri Swayamprakasam to help me in seeing that these rich people—somehow all these people are in Tanjore or most of them are there it is said—do not get any benefit from this legislation."

MR. SPEAKER :—" The question is—

'That the Madras Indebted Agriculturists (Temporary Relief) Amendment Bill, 1954, be taken into consideration at once.' "

The motion was put and carried.

MR. SPEAKER :—" We shall now take up the clause by clause consideration of the Bill."

Clause 2.

MR. SPEAKER :—" I now call upon the hon. Members to move the amendments they have given notice of to this Clause. The hon. Member Sri P. Rangaswami Reddiar will first move his amendments."

* SRI P. RANGASWAMI REDDIAR :—" Sir, I move—

'*In item (i) for the words " before the* 1st *March* 1955 ", substitute *the words " before the* 1st *March* 1955 *and suits filed after the commencement of this Act shall be dismissed with costs if any* ".'

Before speaking on the amendment, I wish to express a grievance. Of Course, all lawyer Members are expected to know the Act. From 10 a.m. in the morning till now I am trying to get Act V of 1954 through the Secretary of the Legislature either from the Library or from some other place. I wanted it for reference and return but I am not able to get the Act. I am not much worried about it but I wish to point out that this is the state of affairs

17th December 1954] [Sri P. Rangaswami Reddiar]

prevailing. If an Act containing some 50 or 100 Sections is required for reference and if the same is not available for reference and return, I do not know how we can function here effectively.

" Now, so far as this amendment is concerned, of course, lawyer Members know that Section 3 of the Madras Indebted Agriculturists (Temporary Relief) Act, 1954, deals with bar of suits and applications. The expression ' bar of suits ' is defined in several statutes, for instance, in Section 11 and Order 11, Rule 2 of the Code of Civil Procedure and 67-A of the Transfer of Property Act. But in all these statutes, the provision relating to bar of suits would simply say that any suit instituted after the commencement of the Act shall be barred. The Section would not contain specific words like ' If suits are instituted after the commencement of this Act, they shall be dismissed with costs.' Here, in this Act, Section 3 deals with bar of suits and Section 4 deals with stay of pending suits and proceedings. Section 3 says that no suit shall be instituted after the commencement of the Act against an agriculturist for the recovery of a ' debt ' as defined under the Act. In some courts suits are instituted against agriculturists and on the plaint allegations, they are taken on file and summons is issued. If the defendant comes forward and pleads that he is an agriculturist entitled to the benefits of the Act, then the question arises whether the suit is not maintainable or barred under this Act. Several courts have expressed the view that there are no words in the Act to the effect that the suits so instituted should be dismissed with costs. That is the difficulty experienced and this is felt especially in mufassal Courts. In order to be more specific and to enable the agriculturists to get the benefit, I have introduced the words ' Suits filed after the commencement of this Act shall be dismissed with costs if any '. There is absolutely nothing wrong in this amendment and I hope the House will accept it."

MR. SPEAKER :—" Is any hon. Member seconding this amendment? "

SRI S. DEIVASIGAMANY :—" Sir, I second it."

MR. SPEAKER :—" Hereafter, as soon as an hon. Member moves an amendment, some other hon. Member must second it immediately."

* SRI P. RANGASWAMI REDDIAR :—" Sir, I am moving the other amendment standing in my name—

' Add *the following as item (iii)* :—

" *(iii) Provided further that a suit shall not be deemed to be a suit not for the recovery of a debt, on the ground that the debt was not borrowed for or utilised for agricultural purposes* ".' "

SRI T. SHANMUGAM :—" Sir, I second the amendment."

MR. SPEAKER :—" The other hon. Members will move the amendments standing in their names."

SRI C. H. KANARAN :—" Sir, I move—

' *In item (i), for the figures, letters and word* " 1st *March* 1955 " substitute *the figures, letters and word* " 1st *August* 1955 ".' "

The amendment was duly seconded.

SRI P. K. GOPALAKRISHNAN :—" Sir, I move—

' For *the words, figures and letters* " *before the* 1st *March* 1955," substitute *the words, figures and letters* " *before the* 1st *June* 1955 ".' "

SRI S. RAMALINGAM :—" Sir, I second the amendment."

SRI R. KRISHNAN :—" Sir, I move—

' *In item (i), for the figures* " 1955 ", substitute *the figures* " 1957 ".' "

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDRAM :—" Sir, I move—

' For *the figures, letters and word* " 1st *March* 1955 ". substitute *the figures, letters and word* " 1st *March* 1956 ".' "

The amendment was duly seconded.

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I beg to move—

' For *the words, figures and letters* " *before the* 1st *March* 1955 " substitute *the words, figures and letters* " *before the* 31*st August* 1955 *and during which time and before* 30*th June* 1955 *a report from a special committee to be constituted for the purpose herein stated be made available to Government recommending suitable means for enacting a comprehensive legislation with a view to give actual relief to indebted agriculturists by wiping off or scaling down all arrears of rent and other debts in deserving cases after enquiring into the nature, depth, etc. of the debt and also suggesting provision for cheap credit facilities to agriculturists* ".' "

The amendment was duly seconded.

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, it looks like a resolution rather than an amendment to a clause in a Bill."

MR. SPEAKER :—" The Hon. Minister will now straighway reply to all these amendments."

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" I oppose all the amendments, Sir."

17th December 1954]

MR. SPEAKER :—" I shall now put the amendments one by one to the vote of the House. I shall now put the amendments of the hon. Member, Sri P. Rangaswami Reddiar. The question is—

'In item (i), *for* the words " before the 1st March 1955 ", *substitute* the words " before the 1st March 1955 and suits filed after the commencement of this Act shall be dismissed with costs if any". ' "

The amendment was lost.

MR. SPEAKER :—" The question is—

'*Add* the following as item (iii) :—

" (iii) **Provided further that a suit shall not be deemed to be a suit not for the recovery of a debt on the ground that the debt was not borrowed for or utilised for agricultural purposes." ' "**

The amendment was lost.

MR. SPEAKER :—" I shall now put the amendment of the hon. Member Sri C. H. Kanaran. The question is—

' In item (i), *for* the figures, letters and word " 1st March 1955 ", ***substitute* the figures, letters and word " 1st August** 1955 ".' "

The amendment was lost.

MR. SPEAKER :—" I shall now put the amendment of the hon. Member Sri P. K. Gopalakrishnan. The question is—

'*For* the words, figures and letters " before the 1st March 1955 ", *substitute* the words, figures and letters " before the **1st June 1955 ". ' "**

The motion was put and declared lost.

A poll was demanded and the House divided thus— 4-20 p.m.

Ayes—24.

Sri P. Ramamurthi.
„ M. Kalyanasundram.
„ T. C. Narayanan Nambiar.
„ C. Kandasamy.
„ K. T. Raju.
„ S. Ramalingam.
„ S. Vadivelu.
„ K. C. Gopalan Unni.
„ V. Madananopal.
„ P. K. Gopalakrishnan.
„ N. Sivaraj.
„ A. K. Subbiah.
Sri K. V. Ramaswami.
„ T. S. Arthanari.
„ P. Venkatesha Sholagar.
„ N. K. Palanisami.
„ K. Madavan Nambiar.
„ E. T Kunhan.
„ C. H. Kanaran.
„ R. Krishnan.
„ M. Manickasundaram.
„ M. Palaniyandi.
„ A. Rathinam.
„ D. Dasarathan.

Noes—85.

The Hon. Sri C. Subramaniam.
„ A. B. Shetty.
„ M. A. Manickavelu Naicker.
Sri K. Rajaram Naidu.
„ B. Bhakthavatsalu Naidu.
„ P. G. Karuthiruman.
Sri S. C. Virupakshiah.
„ N. Mahalingam.
„ P. K. Thirumurthi.
„ R. Kuppuswami.
„ N. Mounaguruswami Naidu.
„ S. R. Arumugam.
„ P. S. Rangaswami Naidu.

[17th December 1954

Noes– 85-cont.

Sri P. G. Manickam.
The Hon. Raja Sri Shanmuga Rajeswara Sethupathi.
Sri N. Ramakrishna Ayyar.
,, M. R. Ramachandran.
,, O. Venkatasubba Reddi.
,, S. Panchaksharam.
,, H. M. Jagannathan.
,, R. Thangavelu.
,, A. Ramachandra Reddiar.
,, K. S. Ardhanareswara Gounder.
,, M. P. Periyaswami.
,, A. Sambasivam.
,, P. M. Munuswami Gounder.
,, O. A. Nanjappa.
The Hon. Sri B. Parameswaran.
,, ,, S. S. Ramasamy Padayachi.
Sri M. S. Munisamy Pillai.
,, V. S. Chinnasami Naidu.
,, A. Ayyanar.
,, V. Muthu.
,, S. Thinakarasami Thevar.
,, V. Chinnaiah.
,, T. V. Sannasi.
,, Antony Peter.
,, N. Rajagopal.
,, R. M. Palaniappan.
,, M. D. Thiagaraja Pillai.
,, S. Arumugam Pillai.
,, M. Marimuthu.
,, L. Anandan.
,, G. Krishnaswami Padayachi.
,, G. Vagheesam Pillai.
,, A. S. Sahajanandam.
,, K. Parthasarathy.
,, M. Jagannathan.
Sri P. S. Krishnaswami Ayyangar.
,, G. Govindan.
,, AR. A. RM. Chokkalingam Chettiar.
,, S. Jayarama Reddiyar.
,, M. Kandaswami Padayachi.
,, R. Krishnaswami Naidu.
,, P. Chellathurai.
,, K. Shanmugham.
,, S. Ramasamy Naidu.
,, P. Urkavalan.
,, T. Ganapathy.
,, R. S. Arumugam.
,, V. Arumugam.
,, P. Selvaraj.
,, K. Ramasamy Doss.
,, S. N. Somayajulu.
,, I. K. Subramania Pillai.
,, Y. Manjaya Shetty.
,, K. Venkatramana Gowda.
,, K. Ishwara.
,, K. P. Kuttikrishnan Nayar.
,, T. Ananta Pai.
,, K. H. Bomman.
,, N. C. Ramasami Kander.
,, S. Somasundara Goundar.
,, G. Samia Koorayar.
,, N. Gopala Menon.
,, V. R. Nagarajan.
,, E. K. Sankara Varma Raja.
,, K. Aranganathan.
,, M. Venugopala Gounder.
,, A. Muthuswamy.
,, T. Manavalan.
,, K. Uppi.
,, K. Kunnhi Mehamed Shajee.
,, K. R. Viswanathan.
,, V. Govindasamy Naidu.

Neutral—20.

4-30 p.m. Sri S. Swayamprakasam.
,, V. Gopala Gounder.
,, M. P. Subramanyam.
,, K. R. Sambandam.
,, P. Rangaswami Reddiar.
,, T. Shunmugam.
,, A. Govindasamy Nayagar.
,, S. P. Thangavelu.
,, A. Veloo.
,, K. S. Lakshmipathi Nayagar.
Sri R. Rangasamy Goundar.
,, P. R. Rajagopala Gounder.
Dr. K. B. Menon.
Sri M. Narayana Kurup.
,, K. T. Sreedharan.
,, C. Kunhirama Kurup.
,, P. Kunhirama Kidav.
,, O. Koran.
,, K. Moidu.
,, C. Velukkan.

Ayes—24; Noes—85; Neutral—20.

The amendment was lost.

The amendment of Sri M. Kalyanasundram was, by leave, withdrawn.

The amendment of Sri R. Krishnan was put and lost.

The amendment of Sri T. C. Narayanan Nambiar was put and lost.

Clause 2 was put and carried.

17th December 1954]

Clauses 3 and 4.

MR. SPEAKER :—" All the amendments to these clauses, which have been given notice of, are consequential amendments."

Clause 3 was put and carried.

Clause 4 was put and carried.

New clause after clause 1.

MR. SPEAKER :—" The hon. Member Sri P. Rangaswami Reddiar will now move his amendment for inserting a new clause after clause 1."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I do not know whether that amendment will be in order. It seeks to amend the original Act itself."

MR. SPEAKER :—" I wish to know whether the amendment given notice of by the hon. Member seeks to amend the parent Act."

SRI P. RANGASWAMI REDDIAR :—" Yes, Sir."

MR. SPEAKER :—" Then, it is out of order."

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Sir, I move—

' *That the Bill be passed into law.*' "

MR. SPEAKER :—" The question is—

' That the Madras Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1954, be passed into law.' "

The motion was put and carried and the Bill was passed into law.

IV.—NON-OFFCIAL BILL.

"சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட படங்களைக் காண்பிக்கச் சொல்லி அதிகப் பணம் வாங்குவது தடுக்கப்படவேண்டும். சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதிகம் செலவு இருக்கிறது. அரை மணி நேரத்திற்கு சர்க்கார் காட்டச்சொல்லும் படத்தைக் காண்பிப்பதில் சினிமா முதலாளிகளுக்குப் பணம் செலவழிகிறது. தனிப்பட்ட முதலாளிகளாக இருந்தால் 200 அல்லது 300 ரூபாய் வரையில் கொடுக்கிறார்கள். மின்சார சக்திக்காகவும் செலவும் கார்பன் ஆகியவற்றிற்கு ஆகும் செலவும் இருக்கிறது. செலவில்லாமல் படத்தைக் காண்பிக்க முடியாது. சர்க்கார் கையில் அதிகாரம் இருக்கிறதென்று முதலாளிகளைக் கட்டாயப்படுத்துவது கூடாது. அது தவறு. அதை மாற்றிக்கொண்டு, நாட்டிலுள்ள மக்களுக்கு கல்வி, விஞ்ஞானம், போன்ற எல்லாத் துறைகளிலும் அறிவு வளர்ச்சி செய்யவேண்டுமென்ற எண்ணம் இருந்தால் அதற்காகப் பணம் செலவழிக்க முன்வரவேண்டும். அதற்காக 35 கோடி ரூபாய் ஆனாலும் பரவாயில்லை. பணம் செலவழிப்பதில் என்ன தவறு ? கொட்டகைக் காரர்கள் தங்களுடைய முதலைப்போட்டு மாதம் 200 ரூபாய் வரையில் செலவு செய்துகொண்டு இருக்கிறார்கள். அம்மாதிரி அவர்களைக் கட்டாயப்படுத்தக்கூடிய அதிகாரம் சர்க்காருக்கு இருக்கக்கூடாதென்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்."

6-28 p.m. * SRI A. GOVINDASAMY NAYAGAR :—" கனம் சபா நாயகர் அவர்களே, இந்தச் சினிமாவில் செய்திப் படங்களைக் காட்ட வேண்டுமென்று கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன். காரணம் இந்த மசோதாவானது மனித உரிமையைப் பரிக்கக் கூடிய ஒரு சட்டமாக இருப்பதனால் இது தப்பு என்பதுதான் என்னுடைய கருத்து. இதற்கு ஒரு ஆதாரம் கூற விரும்புகிறேன். **The licensing authority may grant a licence under this Act to such persons as that authority thinks fit.**

அதாவது கலெக்டர் லைசென்ஸை யாருக்குக் கொடுக்கவேண்டுமென்றும், யார் தகுதியுடையவன் என்றும் நினைக்கிறாரோ அவருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. மனிதனுக்குச் சட்டமா ? அல்லது சட்டத்திற்கு மனிதனா ? என்பதுதான் என் கேள்வி. அந்த முறையில்தான் இந்த கிளாஸ் சேர்க்கப்பட்டிருக்கிறது.

"கலெக்டர் நினைத்தால் இந்தச் சட்டப்படி யாருக்கு லைசென்ஸ் மறுக்கலாம். இல்லையேல் பயந்துகொண்டு காங்கிரஸ்காரர்களின் விசேஷ சிபார்சுகள் போய் தடுத்துவிடுவதற்கு இந்தச் சட்டம் உதவும். ஆகையால்தான் இத்தகைய சட்டம் கூடாது என்கிறேன். இதுபோன்ற விதிகளெல்லாம் சட்டத்திற்கு முரணானது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

"மேலும் இந்த சினிமாப் படங்களில் பொதுஜன அமைதிக்கு பங்கம் விளையும் என்று கலெக்டர் சந்தேகப்பட்டால், அதைத் தடுப்பதற்கு கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தவிர சினிமா படங்களும் பரிசீலனைசெய்து பிறகு திரைபடமாக வெளிவருகிறது. இத்தகைய படங்களைத் தடுக்க கலெக்டருக்கு எந்தவிதமான உரிமையும் கொடுக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

17th December 1954] [Sri A. Govindasamy Nayagar]

"மேலும் ஆளும் கட்சியினர்தான் அவர்களுடைய சொந்தக் கட்சிக்கு விளம்பரம் தேடிக்கொள்ளக்கூடியதாகத்தான் இந்த செய்திப் படங்கள் அமைந்திருக்கிறது. உதாரணமாக வருகிற ஆவடி காங்கிரஸ் மகா நாட்டை படம் பிடித்து விளம்பரம் செய்வார்கள். ஆனால் மற்ற எதிர் கட்சிகள் கம்யூனிஸ்ட் கட்சியானாலும்சரி, திராவிட முன்னேற்றக் கழக மானாலும் பெரிய மகாநாடுகள் நடத்தினால் செய்திப் படமாக சினிமா பிடிப்பதில்லை. ஆகையால் சொந்தக் கட்சிக்கு விளம்பரம் தேடிக்கொள்வதற்காகத்தான் இதை வற்புறுத்துகிறார்கள் என்று சொல் லுகிறேன். இந்த சினிமாக்காரர்கள் இனி லைசென்ஸ் வாங்குவதற்கு அதிக கஷ்டப்படவேண்டியவர்களாக இருக்கலாம். அதற்கு அந்த மாதிரியான சட்டம் கொண்டுவரக்கூடாது என்று சொல்லுகிறேன். இதற்கு மாறாக ஏற்கெனவே ஹைக்கோர்ட்டு தீர்ப்பு அளித்திருக்கிறது. கோர்ட் டிலே கேஸ்போட்டு தள்ளிவிடுகிறார்களே என்றுதான் அவசர அவசர மாக இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆதலால் இதை செலக்ட் கமிட்டிக்கு விடாமலேயே இந்த மசோதாவைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

SRI R. V. SWAMINATHAN :—"Mr. Speaker, I rise to support the motion that was moved by the Hon. the Leader of the House and oppose the amendments moved by my hon. Friends Sri S. Swayamprakasam and Sri M. Palaniyandi. One amendment is that the Bill should be circulated for eliciting public opinion and the other is that the Bill should be referred to a Select Committee. I do not see any reason why it should be circulated or referred to a Select Committee. 6-30 p.m.

"I was carefully following the speech made by the hon. Member Sri Palaniyandi. He is not opposing the principle underlying this Bill. The main points on which he disagrees are those relating to the charges levied by the Government from exhibitors and the restriction regarding the sort of films which are to be exhibited. In the year 1952, after the attainment of Independence, the Central Government re-enacted the Cinematograph Act. Consequent on that, it had become incumbent on the State Government to enact a legislation for the regulation of the cinemas. So far as the other States are concerned, they have enacted the legislation immediately after this Act was passed in the Parliament. The States which have not yet passed such a legislation are Madras, Travancore-Cochin and Mysore States. I do not see any reason why these States have failed to enact a legislation whereas the other States have enacted."

SRI P. RAMAMURTHI :—"All the Southern States have not enacted."

SRI R. V. SWAMINATHAN :—"Probably they wanted to hear the hon. Member Sri P. Ramamurthi in this matter. (Laughter.) During the days of the British Government, they were insisting on the theatre owners to exhibit whatever films they thought should be exhibited. A number of restrictions were imposed then and they wanted all films to be exhibited. Now, after the coming into force of the Constitution, only reasonable restrictions have been imposed. Some interested parties in Madras took up the matter to the Supreme Court which has given a decision recently. The Supreme Court has held that there should

[Sri R. V. Swaminathan] [17th December 1954

be reasonable restrictions. What is meant by 'reasonable restrictions?' Of course, there must be restrictions with regard to the time-limit and the length of the films. The Government should not insist that films of any length should be exhibited or that the time taken should be unlimited.''

Sri M. PALANIYANDI :—" பிரிட்டிஷ் அரசாங்கம் இருந்த காலத்தில் செய்திப் படங்களைக் காண்பிப்பதற்கு பணம் கொடுத்திருக்கிறார்கள். இனாமாக யாரும் படத்தைக் காண்பிக்கவில்லை என்று தெரிவிததுக் கொள்ளுகிறேன்."

Sri R. V. SWAMINATHAN :—'' I would like to come to the point referred to by the hon. Member Sri Palaniyandi later on. The issue of a certificate to exhibit a film is a Central subject falling within the Union List. The issue of a licence to Cinema theatres is a subject falling within the State List. So far as the question of exhibiting approved films in a theatre is concerned. the complaint of my hon. Friend Sri Palaniyandi is that the Government are levying very high charges. I also in a way like to agree with him on this point. I also feel that the charges which the Government collect from the exhibitors should be nominal, say Rs. 30 or Rs. 50. I request the Hon. the Leader of the House to see that the Madras Government recommend to the Central Government to reduce the charges to a reasonable level because so far as the levying of charges is concerned, it is not within our scope. The Central Government can alone do it. We cannot reduce the charges. We can only make a recommendation. Therefore, what is the point in referring this Bill to a Select Committee? My hon. Friend Sri A. Govindasamy Nayagar complained that dirty films which are not of any interest to the public are being compelled to be shown in various theatres. In this connection, I may tell you that I recently happened to visit Bombay some three weeks ago and I saw a film there. It was about our Prime Minister's visit to China. What a wonderful film it is, Sir! I appeal to all hon. Members and particularly to the Communist members, who are opposing this Bill, to see this film for themselves and judge what kind of film it is. It has educative as well as cultural value. One can learn from it the background of China. Such interesting and first-class films are shown. Of course some dirty films may be shown. Once in a week, but oftentimes good films are shown. But in the State of Madras the exhibitors are not showing these newsreels. On the other hand, they are exhibiting the films of Metro-Goldwyn Mayer and 20th Century Fox, which are produced in America. No hon. Member has opposed them. Even Communist members, who are anti-American and who think that America is a nightmare, have not cared to oppose them. Therefore, there is no point in referring this Bill to a Select Committee. I entirely agree with the Hon. the Leader of the House that this Bill must be immediately passed. Even to-day, though the supreme Court has given a decision, the theatre owners in the States of Travancore-Cochin and Mysore are exhibiting these approved films. They are generous. Further, these films are valuable and are of educative value and people like this kind of films. But in Madras

17th December 1954] [Sri R. V. Swaminathan]

the theatre owners have got a prejudice against Government and against anything produced by the Government. Therefore it is that we are being denied the pleasure of seeing such interesting films here. I also appeal to the hon. Members not to press their amendments. There is nothing in this Bill which is repugnant to the Constitution and let us pass it immediately."

* **Sri M. KALYANASUNDRAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப்பற்றி பேசும்போது சர்க்காருடையக் கொள்கைகளை எதிர்க்காமல் இருக்க முடியாது. அது ஆழ்ந்து பரிசீலனை செய்யப்படவேண்டிய விஷயம். ஆகவேதான் கனம் சுயம்பிரகாசம் அவர்கள் **public opinion** க்கும் கனம் பழநியாண்டி அவர்கள் இந்த மசோதாவை ஒரு செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த திருத்தத்தை நான் ஆதரித்துப் பேசுகிறேன். 4-40 p.m.

" இப்பொழுது படம் காட்டுவதில் இருக்கக்கூடிய பல அம்சங்களை நாம் துருவி ஆராய வேண்டியது அவசியம். இந்த மசோதாவை சர்க்கார் ஒரு செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்ற திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் இதில் கவனிக்கவேண்டிய கருத்துக்களை பிறகு பேசிக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஆகவே இந்த சட்டத்தை ஆலோசிப்பதற்கு கனம் நிதி மந்திரி அவர்கள் நிர்ப்பந்தம் செய்யமாட்டார்கள் என்றும் அப்படி செய்யக்கூடாது என்றும் நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது செய்திப்படங்களை கட்டாயமாக காட்ட வேண்டுமென்பது. இந்த விஷயம்பற்றி நம்முடைய ராஜ்யம் மட்டிலும் அல்ல பல ராஜ்யங்களிலும் இது ஒரு முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. இது சினிமாப்படம் காட்டுகிறவர்களுக்கும் சர்க்காருக்கும் இடையே பெரிய தகராறுகள் இருந்துகொண்டே இருக்கும் விஷயம். படம் காட்டப்படுவதில் நன்மை இருக்கிறது என்ற கருத்து ஜனங்களிடத்தில் இருந்தால் இந்த மாதிரியான சினிமாப் படங்களுக்கு ஆட்சேபணையே இருக்க முடியாது. இதை சர்க்கார் சிந்தித்துப் பார்க்கவேண்டும். படத்தில் என்ன கோளாறு இருக்கிறது என்பதை ஆலோசனை பண்ணுவதற்கு பதிலாக கட்டாயப்படுத்தியாவது படத்தைக் காட்டவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதை ஏற்றுக்கொண்டால் சர்க்கார் தங்களுடைய அதிகாரத்தை நியாயமில்லாமல் உபயோகித்து வருவதற்கும் தங்களுடைய கட்சி நலனுக்கு உபயோகித்துக்கொள்ளும்படியான நிலைமைக்கும் கொண்டு போய்விடும். நான் சொல்வது என்னவென்றால் ஒவ்வொரு கட்சியும் தங்களுடைய கட்சி சம்பந்தமாக பிரசாரம் செய்வதற்கு தங்களுடைய கட்சி பலத்தை வைத்துக்கொண்டு செய்தால்தான் நன்றாக இருக்கும். சர்க்கார் கட்சி சர்க்கார் பலத்தை தங்களுடைய கட்சி பிரசாரத்திற்கு உபயோகப்படுத்தக்கூடாது. அது சர்க்கார் கட்சியாக இருந்தாலும் சரி அல்லது எதிர் கட்சியாக இருந்தாலும் சரி, அவரவர்கள் தங்களுடைய சொந்த கட்சி பலத்தை வைத்துக்கொண்டுதான் மக்களிடம் தங்களுடைய பிரசாரத்தை நடத்தவேண்டும். அதிகாரத்தில் இருக்கின்ற காரணத்தால் சர்க்கார் பணத்தை தங்கள் கட்சி பிரசாரத்திற்கு ஒரு சப்சிடியாக வைத்துக்கொள்ளக்கூடாது. இந்த மசோதாவை ஒப்புக்கொண்டால் அப்படி தங்களுடைய கட்சி பிரசாரத்திற்கு மறைமுகமாக உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடிய நிலைமைக்குக் கொண்டுபோய் விடும் என்று நான் கருதுகிறேன்.

" இந்தப் படங்களுக்கு எவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். கனம் மந்திரி அவர்கள் என்ன சொல்லுகிறார் என்றால் மக்களுக்கு அதில் ஒரு 'வைட்டமின் சேர்த்துக்கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார். அவ்விதமிருந்தால் மக்கள் ஏன் அதை எதிர்க்கிறார்கள் ? அந்தப் படங்களில் கோளாறுகள் இல்லாமலிருந்தால் மக்கள் அதை ஆவலுடன் விரும்பமாட்டார்களா என்று கேட்கிறேன். அதனால் அந்தப் படங்களில் என்னமோ கோளாறுகள் இருக்கின்றன என்பது விளங்குகிறது. அதனால்தான் ஜனங்கள் அதை எதிர்க்கிறார்கள். குறித்த

[Sri M. Kalyanasundram] [17th December 1954

நேரத்தில் கொட்டகைக்கு போக முடியாதவர்களுக்கு ஒருவாறு வசதியாக இருக்கிறது. கனம் சுவாமிநாதன் அவர்கள் சொன்னதுபோல் பல நல்ல செய்திப் படங்கள் இருக்கின்றன. எவ்வளவோ இயற்கை வனப்பை சித்தரிக்கும் படங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் ஜனங்கள் விரும்பிப் பார்ப்பார்கள். அப்படிப்பட்ட சினிமாப் படங்களையும் தயாரிக்க முடியும். இப்பொழுது எவ்வளவோ நல்ல படங்கள் இருக்கின்றன. நம்முடைய பிரதம மந்திரி அவர்களுடைய சைனு விஜயம் சம்பந்தமான படத்தைக் குறிப்பிட்டார். அதுமட்டுமல்ல நம்முடைய தேசத்தின் இயற்கைக் காட்சியைக் காட்டக்கூடிய படங்கள் அதுவும் சிறந்த படங்கள் இருக்கின்றன. மகாபலிபுரத்தையும், காஷ்மீர் பள்ளத்தாக்கின் காட்சிகளையும் படம் பிடித்திருக்கிறார்கள். இவை நன்றாக இருக்கின்றன. அந்தப் படங்களையெல்லாம் சர்க்கார் எடுத்துக் காட்டினால் ஜனங்கள் விருப்பத்துடன் பார்ப்பார்கள். அதற்கு ஆட்சேபணை கிடையாது. அவைகளுக்கு கட்டாயப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை. அவைகளுக்கு அதிகப்படியான கிராக்கியும் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன். கனம் பழநியாண்டி அவர்கள் திருச்சியிலிருந்து வருகிறார். அவரே இதைப்பற்றி தெரிவிப்பார் என்றிருந்தேன். ஆனால் அவர் தெரிவிக்கவில்லை. பண்டித ஜவஹர்லால் அவர்களுடைய சைனு விஜயத்தைப்பற்றிய செய்திப் படத்தைப் பார்க்கவேண்டும் என்றும் அதற்கு எவ்வளவு தொகை வேண்டுமானாலும் கொடுக்கிறோம் என்று சொன்னாலும் படம் கிடைக்கவில்லை. அந்தப் படத்தை எவ்வளவு ரூபாய் கொடுத்து வரவழைக்கவும் தயாராக இருக்கிறார்கள். அப்படிக் கேட்டும்கூட சில காரணங்களினால் அந்தப் படத்தைக் கொடுக்காமலிருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்லுகிறார்களென்றால் மட்டமான படத்தை எடுத்துக்கொண்டால் இந்தப் படத்தைக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதனால் தான் கட்டாயப் படுத்தக்கூடிய நிலைமை ஏற்படுகிறது என்று சொல்லுகிறேன். பட முதலாளிகள் பணத்தைக் கொடுத்துவிட்டு படத்தை வாங்கவேண்டிய அவசியம் என்ன என்பது என்னுடைய அபிப்பிராயம்.

" அடுத்தப்படியாக அரசியல் சட்டத்திற்கு முரண்பாடு இருப்பதை தோழர் ராமமூர்த்தி எடுத்துக் கூறினார். அந்த விஷயத்தையும் கனம் நிதி மந்திரி அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்த மாதிரியான சட்டம் இன்னும் பல மாகாணங்களில் கொண்டு வரப்படவில்லை. ஏற்கெனவே இந்த சட்டம் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்று வந்திருக்கிறது. மறுபடியும் இது கோர்ட்டுக்குப் போய் திரும்பி வராமலிருக்க வேண்டும். ஏற்கனவே இருந்த சட்டம் போனது போல் இதுவும் போகாமல் இருக்க வேண்டும். அத்துடன் பம்பாய் சட்ட சபையில் இந்தச் சட்டம் இயற்றப்பட்டு அதுவும் சுப்ரீம் கோர்ட்டில் இன்று சர்ச்சையில் இருக்கிறது. அதைப் போலவே இந்தப் சட்டமும் போகாமல் இருக்க வேண்டும். இது கூர்ந்து கவனிக்க வேண்டிய விஷயமாக இருக்கிறது. இந்த மாதிரியாக கட்டாயப் படுத்துவதற்கு வேண்டிய அதிகாரம் ராஜ்யத்திற்குச் கிடையாது என்று அரசியல் சட்டத்தில் இருக்கிறது. அதனால் இந்தச் சட்டத்தை அவசரப் பட்டுக் கொண்டு இயற்றக் கூடாது என்று கனம் மந்திரி அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" மற்றொரு அவசியமான விஷயம். இந்த மாதிரியாக கட்டாயப்படுத்துவதற்கு நமது ராஜ்யத்தில் இன்னும் அவசியம் ஏற்படவில்லை. இதை இப்பொழுது வற்புறுத்த வேண்டிய அவசியமும் இல்லை. படம் காட்டக் கூடியவர்கள் என்ன சொல்லிகிறார்கள் என்பதையும் அவர்களுடைய அபிப்பிராயம் என்ன வென்பதையும் கேட்டுக் கொண்டு இந்த சட்டத்தை இயற்றலாம் என்று தோன்றுகிறது. படம் காட்டக்கூடியவர்களும் ஏற்றுக் கொள்ளும் முறையில் இந்த சட்டத்தைத் தயாரித்து அதன்படி இயற்றலாம். அதற்காகவே இதை ஒரு செலெக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். படம் காட்டுவதில் நிர்ப்பந்தம் இருக்கக்கூடாது. அப்பொழுதுதான் ஜனங்களின் ஒத்துழைப்பு ஏற்படும். இந்த அம்சங்கள் எல்லாம் சட்டத்தில் இல்லாததால் அதை ஏற்றுக் கொள்ள முடியாமலிருக்கிறது. இதை அப்படியே ஏற்றுக்கொண்டால்

17th December 1954] [Sri M. Kalyanasundram]

அதிகாரிகள் இதை வைத்து துஷ்ப்ரயோகம் செய்வதற்குக் கொண்டு போய்விடும். இவைகளையெல்லாம் ஆலோசனை செய்து ஒரு முடிவிற்கு வர சர்க்கார் இதை ஒரு செலெக்ட் கமிட்டிக்கு விடும் யோசனையை ஒப்புக் கொள்ளுவார் என்ற எண்ணத்துடன் என் பேச்சை இத்துடன் முடித்து கொள்ளுகிறேன். வணக்கம்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, even after hearing the hon. Members on the opposite side, I am not convinced that the Bill that we are enacting will be against the Constitution. But still I feel that in exercising our power in a matter like this, we should carry along with us the people who are concerned with it. Therefore, if further scrutiny is necessary, I am prepared to accept the motion for reference of the Bill to a Select Committee. After very careful consideration, I am convinced that this Bill will be a valid and just measure. But I want to carry with me not only the Members of this House but also the owners of cinema-houses who should not be made to feel that we are imposing something on them. I hope that my referring this Bill to a Select Committee will create a favourable atmosphere wherein the owners of cinema-houses will voluntarily exhibit documentary films and films on current events. Apart from the exhibition of documentary films, this Bill is necessary for other purposes like licensing. I know that all the 3,000 odd cinema licensees will welcome this Bill, because they will like to have a monopoly. If the Government grant licence to everybody who applies, then cinema-houses will spring up indiscriminately and the whole trade will be ruined. When we show this consideration to the owners of existing cinema-houses, they also should take into consideration the Government's point of view. After all, we want them to exhibit documentary films only for the purpose of educating the public. Let us even take it for granted that the Supreme Court holds that the exhibition of certain classes of films cannot be made compulsory. If we say that we are prepared to grant licence to every applicant who is prepared to exhibit such films, I have absolutely no doubt that many more cinema-houses will spring up and this will adversely affect the existing licensees. I appeal to the persons concerned not to take a purely technical and obstinate point of view. I hope the licensees in Madras will come forward to exhibit documentary films voluntarily and I hope they will continue to exhibit such films. 6-50 p.m.

" The hon. Member, Sri M. Kalyanasundram, seems to think that we want these films to be exhibited for propaganda. He looks at everything from the propaganda point of view. We are not doing it from the propaganda point of view; we are doing it from the educational point of view. Of course he might say that even education is propaganda. In that sense everything is propaganda. We should draw a line between propaganda and education. In the films that are produced, some may be good and some may be bad. In this Assembly, sometimes we make good speeches and sometimes bad speeches. Even the best of the film companies cannot say that all their pictures are the best pictures. In a business of this sort, the tastes of the people have also to be

taken into consideration. Some films may be considered to be good and some may be considered to be bad. But that should not be used as an argument for condemning every film that has been produced by the Films Division of the Government of India. As admitted by hon. Members themselves, there are so many good films. Perhaps some films are not as good as the others. But that should not be made an argument to say that we should not ask the licensees to exhibit those films. I hope the matter will be settled amicably and without compulsion so far as this State is concerned.

"I am accepting the amendment moved by Sri Palaniyandi. Sri Palaniyandi will give the names of the Members of the Select Committee."

SRI M. PALANIYANDI :—" The Select Committee may consist of the following Members :—

The Hon. Sri C. Subramaniam.
Sri K. Rajaram Naidu.
,, A. Muthuswamy.
,, A. K. Masilamany Chettiar.
,, O. Venkatasubba Reddi.
,, P. M. Munuswamy Gounder.
,, K. Venkatramana Gowda.
,, P. Chellathurai.
,, A. Sambasivam.
,, K. P. Kuttikrishnan Nair.
,, H. M. Jagannatham.
,, P. Jeevanandam.
,, S. Ramalingam.
,, C. H. Kanaran.
,, A. Ratnam.
,, M. Palaniyandi.
,, O. Koran.
,, T. Shanmugam.
,, R. Rangaswamy Gounder.
,, K. R. Sambandam."

The amendment of Sri M. Palaniyandi was put and carried.

The amendment of Sri S. Swayamprakasam was, by leave, withdrawn.

MR. SPEAKER :—" I nominate the Hon. Sri C. Subramaniam to be the Chairman of the Select Committee."

VI.—HALF-HOUR DEBATE *RE*

STOPPAGE OF STIPENDS TO THE MADRAS STATE STUDENTS IN THE TRAINING SCHOOL AT PRODATOORPET, CHITTOOR DISTRICT.

MR. SPEAKER :—" Sri K. Vinayakam will initiate the debate."

17th December 1954]

* SRI K. VINAYAKAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, நான் சொல்லப்போகிற விஷயம் இரண்டு அரசாங்கத்தைப் பொறுத்திருக்கிறது. ஆகையால், இந்த விஷயத்தில் எந்த அளவுக்கு பொருப்பு எடுத்துக் கொண்டு நான் பேசவேண்டுமோ அந்த அளவுக்கு பொருப்பு எடுத்துக் கொண்டுதான் பேசுகிறேன். இங்கிருக்கும் அங்கத்தினர்கள் தயவு செய்து கவனித்துக்கேட்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்." 6-56 p.m.

SRI A. GOVINDASAMY NAYAGAR :—" There is no quorum, Sir."

MR. SPEAKER :—" கோரம் இருக்கும், பயப்படாதீர்கள்."

* SRI K. VINAYAKAM :—" திருத்தணி தாலூகா (சித்தூர் ஜில்லா) ப்ரொடட்டூர் தமிழ்ப் போதனா முறைப் பள்ளியிலிருந்து ஸ்ரீ ஈ. எஸ். சுப்பிரமணியம் என்பவர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். தமிழ் ஆசிரியர்களைத் தயார்செய்வது மேற்படி பள்ளிக்கூடத்தின் நோக்கமாகும். அங்கு இப்பொழுது ஹையர் கிரேடு ஆசிரியர்களும், செக்கண்டெரி கிரேடு ஆசிரியர்களும் தமிழில் பயிற்சி பெறுகிறார்கள். அந்தப் பள்ளிக்கூடம் ஏற்பட்டதற்குக் காரணம் அப்பகுதியில் தமிழ் மக்கள் அதிகமாக இருப்பதும், தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இல்லாததும்தான் காரணம். தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இல்லாத காரணத்தால் தமிழர்கள் தெலுங்கைப் படிக்க வேண்டிய கட்டாயமும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. அப்பொழுது பள்ளிக் கூடங்களை வைப்பதற்கு அங்கிருக்கிற ஜில்லா போர்டோ, அன்றைய சர்க்காரரோ முயற்சி எடுத்துக்கொள்ளாத காரணத்தால் தனிப்பட்ட மாணவர்கள் தங்களுடைய பணத்தைச் செலவு செய்து இந்தப் பள்ளியைத் துவக்கினார்கள். அப்பொழுது மொழி அடிப்படையில் இரண்டு அரசாங்கங்களும் பிரியவில்லை. பிரிக்கப்படாத சென்னை ராஜ்யத் (Composite Madras State)தில் இன்று இருக்கக்கூடிய கல்வி அமைச்சர் இருக்கும் போது, எங்களுக்கு அந்தப் பள்ளியைவைப்பதற்கு அனுமதி தந்தார். அப்பொழுதிலிருந்து அங்கு ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வந்தார்கள்.

"இதற்கிடையே மொழி அடிப்படையில் ராஜ்யங்கள் பிரிந்தன. சித்தூர் ஜில்லா தகராறுக்கிடமான பகுதி (disputed area) ஆக இருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கமே தகுந்த முயற்சி எடுத்து கணக்குகளைச் சேகரித்து, எல்லைக் கமிஷனின் ஆலோசனைக்கு விட்டிருக்கிறது. அங்கிருக்கும் தமிழ்ப் பயிற்சி மன்றத்தில் தமிழ் படித்த மாணவர்கள் ஆசிரியர்களாகப் பயிற்சிப் பெற்று, பிறகு அப்பகுதியிலுள்ள தமிழ் பள்ளிக்கூடங்களுக்குப் பயன்பட்டு வந்தார்கள். அப்படியிருக்கும்போது மொழி அடிப்படையில் ராஜ்யம் பிரிந்தபிறகு இந்தப் பள்ளிக்கு என்ன வேலை என்ற முறையில் ஆந்திர அரசாங்கம் ஒரு உத்திரவிட்டிருக்கிறது. அதாவது:—'**Consequent on the formation of the Andhra Province there is no necessity for such a Tamil institution in this area**" என்று திட்டவட்டமாக ஒரு உத்திரவைப் போட்டிருக்கிறது. பள்ளிக் கூடத்தை மூடி விட வேண்டு மென்று ஆந்திர அரசாங்கம் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறது. அந்த அறிக்கை என்னிடம் இருக்கிறது. அதை இங்கே வாசிக்க விரும்பவில்லை. யாருக்காவது சந்தேகம் இருந்தால் காட்ட விரும்புகிறேன். ஆந்திர சர்க்கார் அந்த நிலைமையில் இருந்து வருகிறது. அவர்களைப்பற்றி குறை கூறுவதற்கு நான் விரும்பவில்லை."

MR. SPEAKER :—" குறை கூற முடியாது. அது அவர்கள் ராஜ்யத்தைப் பொறுத்தது."

* SRI K. VINAYAKAM :—" ஆகையால் நான் பொறுப்புடன் சொல்லுகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் நிலைமையைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் தெலுங்கு படிக்கும் மாணவர்கள் நம் ராஜ்யத்தில் இருக்கிறார்கள். ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு படிக்கிறார்கள், பல பள்ளிக்கூடங்களில். அவர்களுக்கு நாம் சலுகை காட்டுகிறோம். இரு ராஜ்யங்களுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் இருக்கிறது.

ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குச் இன்ஜினீரிங், மெடிகல், சட்டக் கல்லூரிகளில் நாம் இடம் தந்து இலவசமாக சம்பளம் தந்து . . ."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" இலவசமாக சம்பளம் கொடுப்பதில்லை."

*SRI K. VINAYAKAM :—" ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு நம் ராஜ்யத்திலுள்ள கல்லூரிகளில் நாம் இடம் கொடுத்து வருகிறோம். ஆனால், ஆந்திர அரசாங்கம், தமிழ்ப் பள்ளிக்கூடம் அங்கு இருக்கக்கூடாதென்று சொல்லி மூடி விட வேண்டுமென்று உத்தர
7 p.m. விட்டிருக்கிறார்கள். ராஜ்யம் பிரிவதற்கு முன்னால் அங்கு சேர்ந்த மாணவர்கள் இப்பொழுது சீனியர் வகுப்பில் இருக்கிறார்கள். இரண்டு வருஷம் படிக்க வேண்டும். மொழி அடிப்படையில் ராஜ்யங்கள் பிரியாத போது அங்கு சேர்ந்த மாணவர்கள் இப்பொழுது சீனியர் வகுப்பில் இருக்கிறார்கள்."

SRI A. GOVINDASAMY NAYAGAR :—" There is no quorum, Sir."

MR SPEAKER :—" என்னையும் சேர்த்து எண்ணியிருக்கிறீர்களா ?

SRI K. VINAYAKAM :—" கனம் அங்கத்தினர் தமிழுக்குக் காட்டுகிற அக்கறை இவ்வளவுதான்."

MR. SPEAKER :—" கோரம் இருக்கிறது."

* SRI K. VINAYAKAM :—" மொழிவாரி அடிப்படையில் ஆந்திர ராஜ்யம் பிரிக்கப்படுவதற்கு முன் திருத்தணியிலுள்ள ப்ராதட்டூரில் உள்ள பயிற்சிப் பள்ளியில் தமிழ் மாணவர்கள் சேர்ந்திருந்தார்கள். இம்மாதிரியாக இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தொல்லை அப்பொழுது வரும் என்று அவர்களுக்குத் தெரியாது. அப்பொழுது ஆந்திர அரசாங்கம் என்ன உதவி கொடுத்தார் தெரியுமா? 'நீங்கள் உங்கள் ராஜ்யத்திற்கே போய்விடுங்கள். ஆந்திர பள்ளிக்கூடத்தில் படித்தால் இலவசமாக சம்பளம் கொடுக்கமாட்டோம். கிராண்ட் கிடையாது' என்ற உத்திரவு போட்டிருக்கிறார்கள். அது தவறு, நியாயமற்றது என்று நம் அரசாங்கம் ஆந்திர அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இங்கு இருக்கும் நிர்வாகஸ்தர் என்னைப்போல் உள்ளவர்களும் கல்வி மந்திரியைக் கண்டு குறைபாடுகளை எடுத்துச் சொல்லி என்ன செய்வது என்று அவரைக் கேட்டோம். அதற்கு அவர் நம்முடைய அரசாங்கம் ஆந்திர அரசாங்கத்திற்கு எழுதி இருக்கிறது என்று சொன்னார். அப்படி எழுதிய கடிதத்திற்குப் பதில் வந்திருக்கிறதா என்றால் இல்லை. ஜூலை மாதத்தில் எழுதிய முதல் கடிதத்திற்கு பிறகு இதுவரை எட்டு ரிமைன்டர்கள் நமது சர்க்கார் அனுப்பி இருக்கிறார்கள். இரண்டு தந்திகளும் அனுப்பி இருக்கிறார்கள். இது வரையிலும் எந்த விதமான பதிலும் கர்நூலிலிருந்தும், ஆந்திர சர்க்காரிடமிருந்தும் வரவில்லை. ஆனால் வேறு கடிதங்களுக்கு மாத்திரம் ஆந்திர சர்க்காரிடமிருந்து உடனுக்குடன் பதில் வந்து கொண்டுதான் இருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது பணம் சேர வேண்டும், நம்மிடமிருந்து ஏதாவது பாக்கி சேர வேண்டும் என்பதற்கெல்லாம் கடிதம் வருகிறதே தவிர 'நமக்கு சலுகை, நமது தமிழ் மாணவர்களுக்கு முறைப்படி கொடுக்க வேண்டிய சலுகை வேண்டுமென்று கேட்டால் அதற்குப் பதில் கிடையாது. அன்று ஆந்திர அரசாங்கத்திற்கு எழுதி இருக்கிறது மொழி அடிப்படையிலே பிரியும்போது எந்த நிலையிலே இருந்ததோ அதை அப்படியே வைத்திருப்பதுதான் முறை. எல்லைக் கமிஷன் தீர்ப்பிற்கு பிறகு பின்னால் எதைச் செய்தாலும் பரவாயில்லை. அதுவரை ஏற்கனவே இருக்கக்

கூடிய நிலைமையை மாற்றக் கூடாதென்றுதான் நமது சர்க்கார் எழுதி இருக்கிறார்கள். அதைக்கூட அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இன்னும் ஒரு ஷரத்தும் சேர்த்திருக்கிறார்கள். 'மாணவர்கள் பயிர்ச்சிப் பள்ளியில் சேர்ந்துக் கொள்ளும் விஷயத்தில் நீங்கள் தலையிட்டு தமிழ் மாணவர்கள் படிப்பதைத் தடுக்கக்கூடாதென்று' நமது அரசாங்கம் எழுதி இருக்கிறது. அதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. சீனியர் வகுப்பில் சேர்ந்து படிக்கும் மாணவர்கள் இவ்வாறெல்லாம் ஆந்திர சர்க்காரில் நடக்கும் என்று அவர்கள் நினைக்கவில்லை. இன்றைக்கு தமிழ் மாணவர்கள் ஸ்டைபண்ட் இல்லாமல் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாதத்திற்கு 18 ரூபாயாக கொடுக்ககூடிய பணத்தை அவர்களுக்கு கொடுக்கப்பட வில்லையென்றால், அந்தப் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் செலவிற்கு எங்கே போவார்கள்? கனம் கல்வி அமைச்சருக்கு அவர்கள் கஷ்டப்படுவது நன்கு தெரியும். பள்ளிக் கூடம் திறந்து 8 மாதம் ஆகியும் இன்னும் ஒருவருக்கும் ஸ்டைபண்ட் கொடுக்கவேயில்லை. அப்படியிருக்கும்போது ஆந்திர சர்க்கார் சொல்லுகிறது 'எங்கள் ராஜ்யத்தைச் சேர்ந்த சித்தூர் தமிழர்கள் இங்கு பள்ளியில் படித்தால் நாங்கள் அவர்களுக்கு ஸ்டைபண்ட் கொடுக்க தயாராயிருக்கிறோம்' என்று சொல்லுகிறார்களே தவிர நம் ராஜ்யத்திலிருந்து அங்கு போய் சீனியர் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு கொடுக்க மறுக்கிறார்கள்.

"ஆனால் நம்முடைய அரசாங்கம் நன்கு அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. எங்கள் ராஜ்யத்திலிருந்து போய் படிக்கும் மாணவர்களுக்கு நாங்கள் பணம் தருகிறோம் என்று நிதி அமைச்சர் ஒத்துக் கொண்டிருக்கிறார். அங்கு படிக்கும் தமிழ் மாணவர்களும் அதை வரவேற்கிறார்கள். அனந்தப்பூரில் உள்ள என்ஜினீயரிங் காலேஜும் அதே நிலைமையில்தான் இருக்கிறது. காகிநாடாவில் உள்ள ஜுனியர் வகுப்பில் படிக்கும் மாணவர்களும் அதே நிலைமையில்தான் இருக்கிறார்கள். அவைகளைப் பற்றி எல்லாம் நமது நிதி அமைச்சர் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆந்திர சர்க்காருக்கு எழுதும்போது "To maintain *status quo* as far as he admission of students are concerned என்று நம்முடைய அரசாங்கம் எழுதி இருக்கிறது. அங்குள்ள மாணவர்களும் சென்னை சர்க்கார், நம்மை கவனித்துக் கொள்ளுவார்கள், நமது சர்க்கார் நம்மைக் கைவிடாது என்று நினைத்துத்தான் நம்முடைய ராஜ்யத்தில் இருப்பவர்கள் அந்த ராஜ்யத்தில் போய்ச் சேர்ந்தார்கள். நம் ராஜ்யத்திலிருந்து 120 மாணவர்கள் அங்கு படித்துக்கொண்டு வருகிறார்கள். கஷ்டம் இருக்கிறதென்று தெரிந்தும் ஏன் அவர்கள் அங்குப்போய்ச் சேர்ந்தார்கள் என்று நிதி அமைச்சர் கேட்கலாம். ஆனால் அந்த மாணவர்கள் இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இப்படிப்பட்ட கஷ்டங்களை நமது மாணவர்கள் அனுபவிக்கவேண்டுமென்று சொன்னால் அந்த நிலைமைக்குத் தமிழ் மாணவர்களை விடுவது நியாயம் ஆகுமா என்று நான் மன்றாடி கேட்கிறேன். மற்ற இடங்களில் இருக்கக் கூடிய பயிற்சி மன்றங்களில் அவர்களுக்கு இடம் கிடைத்திருந்தால் வட ஆற்காட்டிலிருந்தும், தென் ஆற்காட்டிலிருந்தும், செங்கற்பட்டிலிருந்தும் மாணவர்கள் சித்தூர் மாவட்டத்திற்கு ஏன் போய் படிக்கப் போகிறார்கள்? நம் ராஜ்யத்தில் இடம் கிடைக்காததினால் அவர்கள் படித்து ஆசிரியர் ஆகவேண்டுமென்ற காரணத்தினால் ஆந்திர ராஜ்யத்திற்கு போய்ச் சேர்ந்தார்கள். இங்கு இடம் கிடைக்காததினால் அங்கு போய்ச் சேர்ந்தார்களே தவிர, இங்கு இடம் கிடைத்து அங்கு போகவில்லை. ஆதலால் அவர்களுக்கு உதவியளிப்பது நமது கடமையாகும். அப்படிச் செய்வது நியாயத்திற்கு விரோதமாகத் தோன்றவில்லை. ஆகையால் இவைகளையெல்லாம் கவனித்து நம் தமிழ் மாணவர்களுக்கு உடனடியாக ஸ்டைபண்ட் கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் ஒரு ஆண்டு அல்லது 6 மாதத்திற்குள் மாணவர்கள் எப்படியும் நம்முடைய அரசாங்கத்திற்குத்தான் வரவேண்டும். ஸ்டைபண்ட் வந்தால் அவர்கள் இந்த ராஜ்

யத்தில் ஆசிரியராக வேலை செய்யத்தயார் என்று பாண்ட் எழுதிக் கொடுக்கவும் தயாராயிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் அங்கு படிக்கும்போது பணவசதி அளித்து, நம் ராஜ்யத்தில் உத்தியோகத்தில் அமர்த்திக்கொண்டால் தவறு ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன். **On the other hand, the Government of Madras must thank the institution for training teachers coming from our territory.** ஆகையால் நான் தமிழரசுக்கழகம் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறேன், தமிழகம் மாணவர்கள் சார்பிலும், ஆசிரியர்கள் சார்பிலும் கேட்டுக் கொள்ளுகிறேன், தமிழ் நாடு நன்றாக இருக்க வேண்டு மென்ற எண்ணத்துடன் நமது அரசாங்கம் ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். டெக்னிகல் அப்ஜெக்ஷன் இருக்கும் என்று அமைச்சரும் அரசாங்கமும் நினைத்தால் மாணவர்களின் நன்மைக்காக அதை மீறிப் போவதால் யாரும் தவறு என்று சொல்லமாட்டார்கள். இந்த ஆண்டு மாத்திரம் கொடுத்து விட்டால் இன்னொரு ஆண்டு கொடுக்காவிட்டால் போகட்டும். இந்த ராஜ்யத்தில் இருக்கிற மாணவர்களை சேர்க்க மாட்டோம், அப்படி சேர்ந்தால் அவர்களுக்கு ஸ்டைபண்ட் இல்லாமற் போனாலும் பரவாயில்லை. இப்போது நமக்கு உதவி செய்வார்கள் என்று நினைத்து இந்த சர்க்கார் ஆந்திர சர்க்காருக்கு எழுதியிருக்கிறது. ஆந்திர சர்க்கார் நமக்கு பதில் தருவார்கள் என்று நினைத்தோம். பதில் தருவார்கள், நன்மை செய்வார்கள் என்றுதான் மாணவர்களும் சேர்ந்திருக்கிறார்கள். இங்கு இருக்கக்கூடிய தெலுங்கு பள்ளிகளை இந்த சர்க்கார் மூடவில்லை. தாராள மனப்பான்மையுடன் இந்த ராஜ்யமக்கள் நடந்துக் கொண்டிருக்கும்போது, நம்முடைய ராஜ்யத்திலிருந்து அங்கு போய் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு நாம் உதவி செய்வதில் அநியாயம் இல்லை. ஆகவே தயவு செய்து இது ஒன்று மாத்திரம் நமது அரசாங்கம் செய்தால் போதும். சீனியர் மாணவர்களுக்கு ஸ்டைபண்டு தருகிறோம் என்று சொல்லி ஜூனியர் மாணவர்களுக்கு அது கிடையாது என்று சொல்வது சரியல்ல. ஆகவே இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்து சர்க்கார் ஆவன செய்வார்களேயானால் அது தமிழுக்கே செய்கிற ஒரு பெரிய தொண்டு என்றுதான் நான் நினைப்பேன். இந்த சபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் கனம் நிதி அமைச்சர் அவர்களை நல்ல முறையிலே இந்தப் பிரச்னையைத் தீர்க்க வழி செய்ய வேண்டும் என்று தூண்டுவார்கள் என்ற நம்பிக்கையுடன் என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்."

7-10 p.m. * **Sri M. KALYANASUNDRAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயத்தில் கனம் நிதி மந்திரி அவர்கள் அதிகமான விவாதத்திற்கு இடம் வைத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஏற்கனவே இந்த விஷயத்தில் இருக்கும் நியாயத்தை உணர்ந்து மாணவர்களுக்கு சர்க்கார் தாங்களாகவே ஸ்டைபெண்ட் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். ஆனால் அதற்குக் குருக்கே இடையூராக இருப்பது ஆந்தர ராஜ்யம்தான். நம்முடைய சர்க்கார் அவ்விதம் நியாயத்தை உணர்ந்து அவர்களுக்கு (மாணவர்களுக்கு) ஸ்டைபெண்ட் தொகை கொடுக்க முன் வந்ததற்கு நான் நம்முடைய சர்க்காரை பாராட்டுகிறேன்.

" இந்த வருஷம் சேர்ந்த மாணவர்களும் பயிற்சி பெற்று வந்தவுடன் அவர்களுக்கும் வேலை கொடுக்க நம் சர்க்கார் முன் வரவேண்டும். அத்துடன் இப்பொழுது திரும்பி வரும் மாணவர்களுக்கும் அவர்கள் வந்தவுடன் அவர்களுக்கு வேலை தேடிக் கொடுக்க வேண்டும். அந்த நிலையில் அவர்களுக்கு இந்த சர்க்கார் உதவி செய்ய வேண்டும் என்ற ஆலோசனையை நான் சொல்லுகிறேன். அந்த விஷயத்தை ஆலோசனை செய்து அதன்படி நடக்க வேண்டும் என்று கனம் மந்திரி அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

" இப்பொழுது அங்கு கவர்னர் ஆட்சி நடைபெறுகிறது. அதனால் நம்முடைய காரியத்தை சுலபமாக முடித்துக் கொள்ளலாம். என்று நினைக்

கிறேன். இருக்கும் சிக்கல்களை தீர்ப்பதற்கு இதுதான் சமயம். இங்கு அரசாளும் கட்சியேதான் அங்கு அரசாட்சி செய்து வந்தது. அதனால் நம்முடைய சிக்கல்கள் தீர முடியாமலிருந்தாலும், இப்பொழுது கவர்னர் ஆட்சி நடப்பதால் இன்னும் சௌகர்யமாக தீர்த்துக் கொள்ளலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். சமீபத்தில் பொதுத் தேர்தல் நடக்கப்போகிறது. அப்பொழுது கம்யூனிஸ்டுகள் அதிகாரத்திற்கு வந்தாலும் ஆந்திராவிலுள்ள தமிழர்களுடைய பிரச்னைகள் எல்லாம் சுமுகமாக தீர்ந்து விடும். அதையும் நம்முடைய கனம் மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் பார்ப்பார் என்றே நினைக்கிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Mr. Speaker, what is the use of wishing for an impossible thing that the Communist Party will come into power and that I will have all the advantages of reasonable treatment from them? It is just like wishing almost for the moon.

" But that apart, the hon. Member Sri Vinayakam appealed to me in the name of Tamil language. But it has absolutely nothing to do with this matter. This is a human problem and I have to view it with human sympathy. That is all. The hon. Member Sri Vinayakam need not be under the impression that by taking interest in this matter, he is doing some service to the Tamil language as such. Certainly, when persons are in difficulty, we are bound to go to their help and as such, he may take credit that he has gone to the help of those who are suffering on account of certain unavoidable circumstances which are beyond their control. But as far as the students in the senior class are concerned, I have already given the assurance and the matter is very simple because the Andhra Government are bound to conduct the examinations for them in their own State. But as far as the students in the junior class are concerned, the Andhra Government have already decided to abolish the course of training of Tamil teachers there. Therefore, difficulty will arise as to how the students studying in the junior class are going to sit for the examinations. So, difficulty will arise in their case. As far as that is concerned, I am prepared to go into the whole matter and also have consultations with the Andhra Government. Whatever is possible, certainly, I will try my best to do. The hon. Member Sri Vinayakam need not be under the impression that we do not want to help these people. Unfortunately, in dealing with another State, difficulties arise. All those technical difficulties will have to be taken note of. But, I am hoping that, with the goodwill of the Andhra Government, it would be possible to arrive at a reasonable settlement in this matter. I hope the hon. Member Sri Vinayakam will be satisfied with this assurance and that through him the persons concerned also will have some solace as far as their representation is concerned."

MR. SPEAKER :—" The House will now adjourn and meet again at 11 a.m. on Monday, the 20th December 1954."

The House then adjourned.

Appendix I.

[Vide answer to unstarred question No. 23 asked by Sri A. Ratnam at the meeting of the Legislative Assembly held on 17th December 1954, page 313 supra.]

Statement showing the number of deaths occurred in the City hospitals including the hospitals maintained by the Corporation during the year 1953 due to infectious diseases.

Serial number and name of institution.	*Number of persons who died due to infectious diseases.* Men.	Women.	Children below 12 years.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
1 Government Royapetta Hospital, Madras.	4	..	..	4
2 Kasturba Gandhi Hospital for Women and Children, Madras.	..	11	12	23
3 Government General Hospital, Madras.	39	29	110	178
4 Government Stanley Hospital, Madras.	70	41	22	133
5 Government Hospital for Women and Children Madras.	..	8	3	11
6 Raja Sir Ramaswamy Mudaliar's Lying-in Hospital, Madras.	..	..	..	..
7 Government Ophthalmic Hospital, Madras.	..	..	..	..
8 Government Mental Hospital, Madras.	..	..	..	..
9 Hospitals maintained by the Corporation of Madras.	267	310	243	820
Total ..	380	399	390	1,169

17th December 1954]

APPENDIX II.

[Vide answer to unstarred question No. 25 asked by Sri A. Ratnam at the meeting of the Legislative Assembly held on 17th December 1954, page 313 supra.]

(a) The quantity of chemical manures proposed to be distributed in each district in the State against the loans granted to the ryots under the Intensive Manuring Scheme is furnished in the statement appended.

(b) *Number of officers.*—Five special District Agricultural Officers.

Number of Agricultural Demonstrators—34.

Arrangements for distribution.—The Agricultural Demonstrators and the special staff vanvass loan applications and submit the same to the District Agricultural Officer for sanctioning the loans after proper scrutiny. Necessary certificates and documents are obtained from the loanees before sanctioning the loans. As soon as the loans are sanctioned, the required quantities of chemical manures are supplied to the loanees from the Agricultural Depots. If there is no stock with Agricultural Depots, loan order slips are issued to the depots of selected distributors, i.e., co-operative societies or private dealers on a 50 :50 basis.

(c) There are no Harijan Officers and Demonstrators among the special staff appointed under the scheme.

(d) *Qualifications for District Agricultural Officers—By direct recruitment.*—(i) The degree of B.Sc. in Agriculture of the Madras University or the Diploma in Agriculture of the College of Agriculture, Coimbatore, and (ii) evidence of ability to plan and organize or to teach propaganda and demonstration or to conduct market surveys and organize regulated markets.

By transfer.—(i) The degree of B.Sc. in Agriculture of the Madras University or the Diploma in Agriculture of the College of Agriculture, Coimbatore, provided that for a period of five years from 13th June 1951, the Certificate of Proficiency in Agriculture of the College of Agriculture, Coimbatore, shall be recognized as an alternative qualification; and

(ii) service for total period of not less than five years in the Madras Agricultural Subordinate Service as an Upper Subordinate in the Agricultural Section.

Qualifications for Demonstrators.—Degree of B.Sc. (Agriculture) of Madras University with an age-limit of 27 years.

[17th December 1954

Statement showing the quantities of ammonium sulphate proposed to be distributed in the various districts of the State under the Intensive Manuring Scheme during 1954–55.

Serial number and name of the district. (1)	Quantity in tons. (2)
1 Chingleput	1,015
2 South Arcot	1,160
3 North Arcot	290
4 Salem	146
5 Coimbatore	1,450
6 Tiruchirappalli	2,900
7 Tanjore	5,800
8 Pattukkottai	3,479
9 Madurai	2,030
10 Ramanathapuram	232
11 Tirunelveli	1,450
12 South Malabar	73
13 North Malabar	58
14 South Kanara	146
	20,229
Reserve ...	73
Total ...	20,302

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Appendix III.

[Vide answer to clause (c) of unstarred question No. 27 asked by Sri C. Ahmed Kutty at the meeting of the Legislative Assembly held on 17th December 1953, page 314 supra.]

Number and name of secondary grade teacher temporarily promoted as Junior Deputy Inspector. (1)	*Qualifications.* (2)	*Date of first regular appointment as secondary grade teacher.* (3)	*Date from which he is in continuous service as Junior Deputy Inspector.* (4)	*Total service in this Government on the date mentioned in the previous column.* (5) Y.	M.	D.
1 Sri K. Koya	S.S.L.C.; S.G.T.T.C.	8th January 1940	10th May 1952	12	4	3
2 Sri P. Imbichutty	Intermediate (Part I); S.G.T.T.C.	26th March 1940	10th May 1952	12	1	15
3 Sri K. Beeran	S.S.L.C.; S. G.T.T.C.	11th March 1941	9th May 1952	11	2	0
4 Sri K. K. Shankaran Numbiar	Do.	10th June 1942	16th October 1952	10	4	7
5 Sri P. Hamza	Do.	3rd December 1942	11th November 1952	9	11	9
6 Sri P. Narayanan Nair	Do.	22nd March 1944	18th November 1952	8	7	28
7 Sri E. Achutha Menon	Do.	18th October 1945	10th December 1953	8	1	23
8 Sri Paul Padiyangadan	Do.	4th November 1946	10th December 1953	7	1	7
9 Sri N. Kesavan Nambisan	Do.	6th September 1943	8th March 1954	10	3	3
10 Sri K. Kunhiraman	Do.	19th July 1945	10th April 1954	8	8	23
11 Sri C. Moosan	Do.	18th February 1947	20th May 1954	7	3	3
12 Sri E. Purushothaman Nsmboodri	B.A. (Parts I and II); S.G.T.T.C.	14th June 1947	22nd May 1954	6	11	9
13 Sri P. K. Govindan	S.S.L.C.; S.G.T.T.C.	20th June 1947	24th May 1954	6	11	5
14 Sri A. Raghavan Nambiar	Do.	14th August 1947	27th May 1954	6	9	14
15 Sri N. P. Krishnan*	Do.	25th August 1947	24th May 1954	6	9	0

* Since reverted from 17th July 1954 afternoon.

[17th December 1954

APPENDIX IV.

[Vide answer to clauses (*b*) and (*c*) of unstarred question No. 29 asked by Sri M. Narayana Kurup at the meeting of the Legislative Assembly held on 17th December 1954, page 315 supra.]

Number of Junior Deputy Inspectors of Schools recruited from 1949 to 1953 in each year.

Year.	*Coimbatore Division.*	*Madurai Division.*
1949	31	12
1950	8	13
1951	12	10
1952	Nil,	Nil.
1953	Nil.	1

Details regarding the number of persons appointed by direct recruitment and by transfer from other departments, etc.

(i) Coimbatore Division—

	1949.	1950.	1951.
Direct recruitment	6	..	4
Jail Department	2	..	..
Fisheries Department	3	1	..
Local Body and Private Schools ..	[illegible]	7	8
Promotees	15	..	..
Ex-Pudukkottai employee absorbed ..	1	..	..
	31	8	12

(ii) Madurai Division—

	1949.	1950.	1951.	1952.	1953
Direct recruitment	8	10	10	Nil.	Nil.
Jail Department	2	..	..	..	..
Police Department	1	1	..	..	..
Harijan Welfare Department.	1	2	..	..	..
Revenue Department ..	..	..	..	..	1
	12	13	10	..	1